# திருமறைத்தீபம்

**BIBLE LAMP**

மலர் 2 ஜூலை - செப்டம்பர் 1996 இதழ் 3

## உள்ளே

திருமறையின் அடிப்படையில் இன்றைய அருளுரைகள் அமையவில்லை என்பது மறுக்க முடியாததொரு உண்மை. இதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்வதோடு அருளுரை எப்படி அமைய வேண்டும் என்றும் விளக்க முனைகிறது இவ்விதழின் கட்டுரைகள்.

## இந்த இதழில்


- தொடரட்டும் சீர்திருத்தம்
- திருச்சபை
- அருளுரைக்கு ஏன் . . .
- பிரசங்கிகளுக்கு . . .
- கிறிஸ்தவக் கோட்பாடுகள்
- அருளுரை - விளக்கம்
- வில்லியம் கேரி
- கிருபையின் போதனைகள்
- கேள்வி? - பதில்!
- எண்ணங்கள்


## திருவசனப் பிரசங்கம்

"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு. ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்திற்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும்."

**2 தீமோத்தேயு 4:2**

திருமறைத்தீபம்
BIBLE LAMP

ISSN 1173-7255

ஜூலை - செப்டெம்பர் 1996

இதழ் 3

ஆசிரியர்: ஆர். பாலா
தொலைபேசி எண்:
(09) 5271522

வெளியிடுவோர்:
சவரின் கிரேஸ் வெளியீடுகள்
Sovereign Grace Publications
த. பெ. எண் 62-159
சில்வியா பார்க்
ஆக்லாந்து
நியூசிலாந்து

ஆசிரியருக்கான கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

Bible Lamp
P. O. Box 62-159
Sylvia Park
Auckland
New Zealand

காலாண்டுப் பத்திரிகையான திருமறைத்தீபம் ஓர் இலவச வெளியீடு.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப் படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதி யின்றி பத்திரிகையின் எப்பகுதியை யும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

# தொடரட்டும் சீர்திருத்தம்

தொடரட்டும் சீர்திருத்தம்
தொல்லைமிகு இவ்வுலகில்
தூங்கவன் தாழ்பணிந்து
தூயதிருமறை பயின்று
சிங்கமென மார்புயர்த்தி
சீரற்ற வழிபோக்கி
அன்பு, அறம், தாழ்மை
அனைத்தும் அடங்கப்பெற்று
தொடரட்டும் சீர்திருத்தம்
தொல்லைமிகு இவ்வுலகில்

⊛

சீர்திருத்தவாதிகள் லூதர், கல்வின்
சிந்திய வியர்வையில்
தோன்றிய செம்மல்களாய்
திருமறை ஒன்றையே
தீர்க்கமாய்ப் பின்பற்றி
சிந்தனையும், செயலும்
சீரோடு இயேசுவின்
சொற்படி அமையத்
தொடரட்டும் சீர்திருத்தம்
தொல்லைமிகு இவ்வுலகில்

⊛

அடக்குமுறை கொண்டு
அவனியை ஆண்டுவந்த
கருணையற்ற கத்தோலிக்க
காட்டாட்சி முறையினின்று
சீர்திருத்தம் காண்பதற்கு
சிந்திய இரத்தம்தான்
விடுதலை தந்ததென்ற
வீரவுணர்வு கொண்டு
தொடரட்டும் சீர்திருத்தம்
தொல்லைமிகு இவ்வுலகில்

⊛

வேதம் மட்டுமே
கிருபை மட்டுமே
விசுவாசம் மட்டுமே
வீணாக இவையின்றி
விண்ணுலகம் போகலாம்
என்று வாதித்த
எத்தர்கள் கொட்டத்தை
அடக்கியோர் வழிநின்று
தொடரட்டும் சீர்திருத்தம்
தொல்லைமிகு இவ்வுலகில்

⊛

திருமறையை எடுத்தெறிந்து
தேவனை நிராகரித்துத்
தம்சொல்லே தேவசித்தம்
தரணிக்கு வழிகாட்டும்
என்றெல்லாம் எடுத்துரைத்த
எளியோர் வழிநின்று
திருச்சபையைத் திசைதிருப்பும்
திருடர்கள் முகத்திரையகல
தொடரட்டும் சீர்திருத்தம்
தொல்லைமிகு இவ்வுலகில்

பணத்தாசை பிடித்தாட்டப்
பதவி மோகம் தலைக்கேறத்
திருமறையைத் தெருவில் வீசி
திருச்சபையைத்தன் சொத்தாக்கித்
தேவமக்கள் நெஞ்செல்லாம்
தீயாய்க் கருகிநிற்க
தலைவன் போல் வாழ்வோரின்
முகத்திரைகிழிந்(து) ஊரறிய
தொடரட்டும் சீர்திருத்தம்
தொல்லைமிகு இவ்வுலகில்

⊛

நாதனின் பெயர்சொல்லி
வேதத்தைப் பயன்படுத்தி
மாயங்கள் செயும் கூட்டம்
மேதினியில் பெருகிவரும்
இருளான காலமிதில்
இருளகன்று ஒளிதோன்ற
சத்தியத்தை மட்டுமே
நித்தியம் போதித்துத்
தொடரட்டும் சீர்திருத்தம்
தொல்லைமிகு இவ்வுலகில்

⊛

வாய்ச்சொல் வீரராய்
வம்பழந்து வாழாமல்
வஞ்சகம், பொய், புரட்டு
நெஞ்சி லேதுமில்லாமல்
தாய்ச்சொல் கேட்டு நிற்கும்
தனயனைப் போலாகிக்
கர்த்தர்தம் மகிமையினைக்
கடமையெனவே கருதித்
தொடரட்டும் சீர்திருத்தம்
தொல்லைமிகு இவ்வுலகில்

⊛

பாவத்திலுலலுகின்ற மானுடமே
தேவகோபத்தினின்றும் விடுபடவே
கல்வாரி நாயகன் மரணத்தால்
கண்டுவிட்ட நல்வழியைக்
காசுக்கு விற்கின்ற கேடானோர்
காசினியில் உலவுகின்ற நாளிதிலே
நாசத்தின் வாசலை நாடிநிற்போர்
நம்நேசரை நாடிவரப் போதித்துத்
தொடரட்டும் சீர்திருத்தம்
தொல்லைமிகு இவ்வுலகில்

⊛

எழுந்திரு ! ஏறாய்ப் புறப்படு
எத்தர்கள் கொட்டத்தை அடக்கிவிடு
உறக்கம், உணவு, உயிர் மறந்து
உலகத்து மானிடரின் நன்மைக்காம்
பரிசுத்த ஆவியின் வல்லமை
நிரம்பிய இயேசுவின் தாசனாய்
திருமறையைக் கரத்தினில் ஏந்தியே
திக்கெட்டும் தூள்பரக்கத்
தொடரட்டும் சீர்திருத்தம்
தொல்லைமிகு இவ்வுலகில்

# கர்த்தர் கட்டியெழுப்பும் சபை

**கர்த்தர் இவ்வுலகில் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் திருச்சபையை, இன்று என்றுமே இல்லாத அளவிற்குப் பேராபத்து சூழ்ந்துள்ளது. இந்தப் பேராபத்து திருச்சபையை தீவிரத்தோடு அழித்தொழிப்பதாக இல்லாமல், அதை ஒரு பொருட்டாகக் கருதாமல், அலட்சியப் படுத்துவதாக அமைந்துள்ளது. திருச்சபைக்கும், அது பற்றித் திருமறை தரும் போதனைகளுக்கும் இன்று எங்கும் மதிப்பில்லை. திருமறையை அலட்சியம் செய்து, திருச்சபை என்ற பெயரில் கேலிக்கூத்துகள் நடத்துபவர்களும், திருச்சபையே தேவையில்லை என்று ஆணவத்தோடு அலைபவர்களுமே இன்று அவனியிலே பவனி வருகிறார்கள். திருமறை தெளிவோடு போதிக்கும், கர்த்தரின் அன்புக்குப் பாத்திரமான திருச்சபையைப் பற்றிய திருமறையின் போதனையை இத்தொடர்கட்டுரை அலசுகிறது. - ஆசிரியர்.**

கர்த்தர் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் சபையின் பல அம்சங்களை விபரமாக வேதபூர்வமாக ஆராய்ந்து வருகிறோம். இக்கட்டுரைகள் சபைக் கோட்பாடுகளை முழுமையாக விபரிப்பதை நோக்கமாகக் கொள்ளாது, இன்றைய சூழ்நிலையில் பலராலும் அலட்சியப் படுத்தப்படும் திருச்சபையின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாத அம்சங்களை மறுபடியும் கிறிஸ்தவ வாசகர்களின் நினைவிற்குக் கொண்டுவருவதையே பெரு நோக்கமாகக் கொண்டுள்ளது. அவ்வகையில் பல முக்கிய அம்சங்களைத் திருமறையின் துணையுடன் இதுவரை ஆராய்ந்தோம். இவ்விதழில் திருச்சபையின் வாழ்வுக்கும் வளத்துக்கும் அத்தியாவசியமான இன்னுமொரு அம்சத்தைக் கவனிப்போம்.

## கொள்கைகளும், கோட்பாடுகளும் (Doctrine)

உலகெங்கும் காணப்படும் பல்வேறு கிறிஸ்தவ சமயக்கிளைகள், சபைகள் இன்று வெவ்வேறு கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றி வருவது அனைவரும் அறிந்ததோர் உண்மை. சிலவேளைகளில் இத்தகைய கொள்கை வேறுபாடுகள் பலரது மனதைக் குழப்புவதாகவும் அமைந்து விடுகின்றன. புதிதாக கிறிஸ்துவை அறிந்து கொண்டவர்கள் எது உண்மை எது போலி என்று அறிந்து கொள்ள முடியாது மனந்தடுமாறும் நிலைக்கும் இது வித்திடுகிறது. சிலர் இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்கைகள், கோட்பாடுகளே தேவையில்லை, அவை கிறிஸ்தவர்களைக் குழப்பும் அவசியமற்ற வீண் பேச்சுக்கள் என்று முடிவெடுத்துக் கொள்கைகள் கோட்பாடுகள் என்பதறியாத ஒரு கிறிஸ்தவத்தை நிலைநாட்டக் கங்கணம் கட்டுகின்றனர். திருமறையை மட்டுமே நம்புகிறோம் என்று மார் தட்டுகின்ற வேறு சிலர் தாம் விசுவாசிப்பது என்ன என்று விளக்கவும் வழியில்லாது எதையும் பிரித்தறியும் பக்குவமற்ற நிலைமையிலுள்ளனர்.

திருமறையின் அடிப்படையிலான கொள்கைகள் கோட்பாடுகளை வரையறுத்துப் பின்பற்றுவதும், போதிப்பதும் தவறா? அவ்வாறு செய்வது சபைகளையும் கிறிஸ்தவர்களையும் பிரிக்கும் காரியமா? கிறிஸ்தவ ஒற்றுமைக்கு சாவு மணியடிக்கும் செயலா? என்பது போன்ற பலரது மனத்தையும் உறுத்திக் கொண்டிருக்கும் கேள்விகளுக்கு நாம் விடையளித்தேயாக வேண்டும்.

> **கோட்பாடுகள் கிறிஸ்தவ ஒற்றுமைக்கு எதிரியா?**

## ஆரோக்கியமான உபதேசம்

அப்போஸ்தலர் நடபடிகள் 2:42 இல் ஆதி சபைக்கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலரின் போதனைகளுக்குத் தம்மை ஒப்புக் கொடுத்ததாக வாசிக்கிறோம். ஆகவே அப்போஸ்தலரின் போதனைகள் யாவை என்பதை இவர்கள் கேள்விப்பட்டிருந்ததோடு அப்போதனைகளுக்கே தம்மை ஒப்புக் கொடுத்தார்கள். கிறிஸ்து இயேசு போதித்த அனைத்தையும் அப்போஸ்தலர் மட்டுமே அறிந்திருந்தார்கள்; அவையே புதிய ஏற்பாடாக நமக்குக் கிறிஸ்துவால் அருளப்பட்டிருக்கிறது. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதியபோது 'ஆரோக்கியமான' உபதேசத்தைச் செய்யும்படியாகப் பலமுறை கட்டளையிடுவதைப் பார்க்கிறோம். இதிலிருந்து ஆரோக்கியமான, தெளிவான போதனைகளே கிறிஸ்தவர்கள் வாழ, வளரத்துணை செய்யும் என்று பவுல் விசுவாசித்ததைக் காண்கிறோம் (ரோமர் 16:17; யூதா 3; 2 தீமோ. 2:2; 2 தெசலோ. 3:6). அதுமட்டுமன்றி, எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் கர்த்தர் ஒருவரே, விசுவாசமும் ஒன்றே என்று போதிக்கும் பவுல், அவ்விசுவாசத்திற்கும், சபை ஒற்றுமைக்கும் எதிரியாக இருப்பது 'தந்திரமுள்ள போதனைகளே' என்றும், அவற்றில் இருந்து கிறிஸ்தவர்கள் தம்மைக் காத்துக் கொள்ள 'அன்புடன் சத்தியத்தைக்' கைக்கொள்ள வேண்டும் என்றும் போதிக்கிறார் (எபே.4:1-24). தீத்துவுக்கு புத்தி கூறும் பவுல், (தீத்து 1:9) ஆரோக்கியமான உபதேசத்தால் புத்தி கூறும்படியாகவும், உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகிறவனாயும் இருக்க வேண்டும் என்று வலிந்துரைப்பதைப் பார்க்கிறோம். இவற்றிலிருந்து திருமறை அரைகுறைப் போதனைகளாக அல்லாமல், ஆரோக்

(மறுபக்கம்)


கியமான, தெளிவான கோட்பாடுகளைப் பின்பற்றும்படி போதிப்பதைப் பார்க்கிறோம். ஆதிசபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் தாம் விசுவாசித்தவை எவை என்பதைத் தெளிவாக அறிந்திருந்ததோடு, அவற்றிற்கு மாறானவற்றை ஏற்க மறுத்தார்கள்.

### சமய சமரச இயக்கம் (Ecumenical Movement)

ஆனால் இன்று தமிழ் பேசும் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒற்றுமை, ஐக்கியம் என்ற பெயரில் கொள்கைகளும், திருமறைக் கோட்பாடுகளும் முற்றாக நிராகரிக்கப்படுகின்றன. இதற்கான காரணங்கள் பல; இவற்றில் ஒன்று: கிறிஸ்தவ ஒற்றுமை என்ற பெயரில் எல்லா சபைகளையும், சமயக்கிளைகளையும், நிறுவனங்களையும் ஒன்று சேர்க்கும் 'சமய சமரச இயக்கத்தின்' (Ecumenical Movement) பணிகளாகும். இவ்வியக்கப்போதனைகளைப் பின்பற்றுபவர்கள், கொள்கைகளும், கோட்பாடுகளும் ஒற்றுமையைக் குலைக்கும் என்றும், மெய்யான ஐக்கியம் ஏற்பட வேண்டுமானால் எல்லோரையும் அனுசரித்துப்போக வேண்டும் என்றும் போதித்து, வெளிப்புறமான சபைகளினதும், நிறுவனங்களினதும் ஒற்றுமையை வலியுறுத்துகிறார்கள். இவர்களைப் பொறுத்தவரையில் 'சத்தியம்' பலராலும் பலவிதங்களில் புரிந்து கொள்ளப்படும் பல்வேறு சாயல்களைக் கொண்டது. இன்று நம்மத்தியில் காணப்படும் பல்வேறு சமயக்கிளைகளும், பரவசக்குழுக்கள் உட்பட, இத்தகைய வியாதியினால் பீடிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

### கிறிஸ்தவ நற்செய்திக் கோட்பாடு (Evangelicalism)

இரண்டாவதாக இன்று கிறிஸ்தவ நற்செய்திக் கோட்பாட்டிற்குப் (Evangelicalism) புதுவிளக்கம் தரப்படுவதை அவதானிக்கலாம். ஆரம்பத்தில் கிறிஸ்தவ நற்செய்திக் கோட்பாடு என்பது திருமறையின் அதிகாரத்தையும், போதுமான தன்மையையும் ஐயமின்றி விசுவாசித்தவர்களை மட்டுமே உள்ளடக்கியதாக இருந்தது. இன்று ரோமன் கத்தோலிக்கர்கள், திருமறையின் அதிகாரத்தையும், போதுமான தன்மையையும் தொடர்ந்து நிராகரித்து வரும் 'பரவசக் குழுக்கள்', நியோ-இவெஞ்சலிக்கள் (Neo-Evangelical - இவ்வியக்கம் திருமறை முழுவதும் தேவனுடைய வார்த்தையல்ல, ஆனால் அதில் கர்த்தருடைய வார்த்தையும் அடங்கியுள்ளது என்று போதிக்கின்றது.) போன்றோரையும் உள்ளடக்கும் இயக்கமாகக் காணப்படுகின்றது. சமீபத்தில் ஆசிரியருக்கு நண்பரொருவரால் அனுப்பி வைக்கப்பட்ட `Aim' என்ற 'இவெஞ்சலிக்கள் பெலோசிப் ஒப் இந்தியா'வின் மாத இதழில் மறைதிரு. சுந்தர்ராஜ் என்பவரால் எழுதப்பட்ட கட்டுரை இதை உறுதிப்படுத்துகிறது. திரு. சுந்தர்ராஜ், மார்டின் லூதரின் பெயரைப் பயன்படுத்தி இப்புதுக் கருத்துக்களையே லூதரும் விசுவாசித்ததாக திரிபுபடுத்தி கிறிஸ்தவ நற்செய்திக் கோட்பாட்டிற்குப் புது விளக்கமளித்துள்ளார். புரட்டஸ்தாந்து சீர்திருத்தவாதம் பற்றிய சரியான ஞானமில்லாததால் வந்த வினை இது.




(E. F. I, மேற்காணப்படும் படத்திலுள்ள சீர்திருத்தவாத மரத்தின் பல்வேறு கிளைகளாக ஏழு பிரிவுகளை அடையாளம் காண்கின்றது. இவற்றில் ஒன்றைத்தவிர (Confessionalism) ஏனையவை சீர்திருத்தவாதத்தையோ அதன் கோட்பாடுகளையோ பிரதிபலிக்கும் இயக்கங்களல்ல)

மார்டின் லூதர் இன்று உயிரோடிருந்தால் இவற்றை வாசித்துக் கண்ணீர் வடித்திருப்பார். இன்றைய வேதாகமக் கல்லூரிகளில் பலவும் திரு. சுந்தர்ராஜ் விளக்கும் இக்கொள்கைகளின் அடிப்படையிலேயே இயங்கி வருகின்றன. `Aim' இல் வெளிவந்த மேல்வரும் படம் இவர்களது மனக் குழப்பத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைகின்றது.

கிறிஸ்தவ நற்செய்திக் கோட்பாட்டிற்கு (Evangelicalism) இன்று புது விளக்கமளிப்பவர்கள் கிறிஸ்தவ ஒற்றுமை என்ற பெயரில் திருமறையைத் தூக்கி எறிந்துவிட்டு திருச்சபையைக் கட்டி எழுப்ப முனைகிறார்கள். ஆரம்ப காலத்திலிருந்தே சீர்திருத்தவாதமும் (Reformation), கிறிஸ்தவ நற்செய்திக் கோட்பாடும் (Evengelicalism), ஒன்றாகவே கருதப்பட்டது. இவை இருவேறு கோட்பாடுகளல்ல. அத்தோடு 17 ஆம் நூற்றாண்டு 'பியூரிட்டனிசமும்' இதே கோட்பாடுகளையே தொடர்ந்து பின்பற்றியது. இன்று இதற்கு புது விளக்கம் கொடுக்க முனைபவர்கள் தான் இக்கோட்பாடுகளைக் கைவிட்டு 'சந்தர்ப்பவாதிகளாய்' மாறியிருக்கிறார்களே தவிர கிறிஸ்தவ நற்செய்திக் கோட்பாடுகள் ஒரு போதுமே மாற்றமடையவில்லை.

### கோட்பாடுகளை விளக்கும் விசுவாச அறிக்கை

இவற்றிலிருந்து கோட்பாடுகளின் அவசியத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. வெறுமனே வேதத்தை விசுவாசிக்கிறேன் என்று கூறுவது மட்டும் போதாது. எதை விசுவாசிக்கிறோம் என்று தெளிவாக அறிந்திருப்பதோடு, அவற்றை விளக்கிக்கூற வேண்டியதும் அவசியம். அவ்வாறு செய்ய விரும்பாதவர்களும், இயலாதவர்களும், வேதத்தைப் பயன்படுத்திப் புரட்டுக்கள் செய்பவர்களுமே இன்று 'வேதத்தை விசுவாசிக்கிறோம்' என்ற போர்வையின் கீழ் மறைந்து நிற்கிறார்கள்.

குழறுபடியான கோட்பாடுகளைக் கொண்டிராது திருமறையின் தெளிவான சத்தியங்களை விளக்கும் விசுவாச அறிக்கை ஒரு சபை வேதபூர்வமாக அமைய மிக அவசியமாகும். இது பலவிதங்களில் உதவும்.

1. சத்தியத்தைப் பாதுகாக்கவும், தொடர்ந்து பின்பற்றவும் துணை புரியும்.

இன்று எல்லா சபைகளுமே திருமறையைப் பின்பற்றுவதாக மார்தட்டுவதால், விளக்கமானதொரு விசுவாச அறிக்கை சபையாக நாம் பின்பற்றும் சத்தியங்களைத் தெளிவாக விவரித்துக் காட்டி அவற்றைப் பாதுகாக்கவும் உதவும்.

2. போலியானதும் ஆபத்தானதுமான கள்ளப்போதனைகளில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், அவற்றை இனங்கண்டு எதிர்க்கவும் துணை புரியும்.

சத்தியம் எது என்று புரியாமல் அதை நாம் எவ்வாறு பாதுகாக்கவோ வளர்க்கவோ முடியும்? எந்த அடிப்படையில் ஒரு போதனையைத் தவறானது என்று நாம் தள்ளி வைப்பது? சாம்பாருக்குள் பலவித கறிகாய்களும் மிதப்பது போல்

சத்தியம் என்ற பெயரில் அண்டிவரும் சகலதையும் அரவணைக்கும் சபைகளுக்கு மத்தியில் திருமறையின் போதனையைத் தெளிவாகக் கொண்டுள்ள விசுவாச அறிக்கையைப் பயன்படுத்தும் சபை போலிப் போதனைகளை இனங்கண்டு அவற்றின் நச்சுத் தன்மையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். யெகோவாவின் சாட்சிகள், சிரிப்பலை மாயத்தில் கட்டுண்டு நடனமிடும் பரவசக் குழுக்கள் போன்றவற்றின் பாதிப்பிலிருந்து எம்மைக்காத்துக் கொள்ள இவ்விசுவாச அறிக்கை உதவும்.

*3. சபை அங்கத்தவர்கள் எதை விசுவாசிக்கிறார்கள் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளத் துணை செய்யும்.*

சபையில் அங்கத்தவர்களாக சேர்பவர்கள் விசுவாச அறிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டியிருப்பதால் சபையாக போலிப்போதனைகளில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். சபை அங்கத்தவர்களாக சேர்பவர்கள் அவற்றை அறிந்து ஆதரித்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றுதான் சபை எதிர்பார்க்கிறதே தவிர அவர்கள் இறையியல் வல்லுனர்களாக மாற வேண்டுமென்று எதிர்பார்ப்பதில்லை. சபை அங்கத்தவர்கள் சபைக்குக் கட்டுப்படுவதோடு விசுவாசமாகவும் இருக்க வேண்டியது அவசியம். அவர்களிடம் இருந்து சபை எத்தகைய விசுவாசத்தை எதிர்பார்க்கிறது என்பதை விசுவாச அறிக்கை விளக்குவதாக அமையும்.

*4. விசுவாச அறிக்கையை வேதபூர்வமாக விளக்கமாகப் படித்து ஏற்று அதன் அடிப்படையில் போதிப்பவர்களையே சபை போதகர்களாகக் கொள்வதால் சபையாக சத்தியத்தைக் காத்துக் கொள்ள முடியும்.*

சமீபத்தில் என்னுடன் கடிதத் தொடர்பு கொண்ட ஒரு போதகர், பிற சபையைச் சேர்ந்தவர்களையும் நமது சபையில் போதிக்க அழைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இது முறையா? அவர்கள் தவறானதைப் போதித்து விட்டால் என்னாவது? என்று கேட்டு பதிலளிக்கும்படி எழுதியிருந்தார். அப்போதக அன்பரும் இதை வாசிப்பார் என்று நினைக்கிறேன். சபையாகத் தெளிவான சத்தியத்தைப் பின்பற்றி அதை மட்டுமே போதிக்கும் சபைகள் எவரையும் பிரசங்கம் செய்யவிட்டு விடக்கூடாது. சபையை அழிக்க இதைவிட மோசமான வேறு வழியிருக்க முடியாது. விஷம் உடலில் பரவுவதுபோல நச்சுப்போதனைகள் பிரசங்கிகள் மூலம் இன்று பல இடங்களிலும் புகுந்து விடுகின்றது. இதைத் தவிர்க்க விசுவாச அறிக்கை உதவும். அதை ஏற்றுப் பின்பற்றுபவர்களை மட்டும் பிரசங்கிக்க அனுமதித்து சத்தியத்தை மட்டுமே சபையார் கேட்க வாய்ப்பு ஏற்படுத்தித் தருவது போதகர்கள் கடமை. விசுவாச அறிக்கை நாம் எதை விசுவாசிக்கிறோம் என்று எடுத்துக் கூறுவதால் அதை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கும் நமக்கும் தொடர்பிருக்க முடியாது.

*5. விசுவாச அறிக்கை எந்த அடிப்படையில் ஏனைய சபைகளோடு தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை விளக்க உதவும்.*

கர்த்தருடைய சபைகளோடு நாம் தொடர்பு வைத்துக் கொள்வது மிக அவசியம். ஐக்கியத்தில் வளரவும், இயன்றவரை கிறிஸ்தவ ஊழியங்களில் இணைந்து ஈடுபடவும் வேண்டுமென வேதம் எதிர்பார்க்கிறது. ஆனால் வேதத்தின் பெயரைச் சாட்டி எத்தனையோ சபைகளும், சமயக் கிளைகளும் காளான்கள் போல் பரவியிருக்கும் நிலையில் எச்சபைகள் மெய்யாகவே திருமறையின் அடிப்படையில் அமைந்து திருமறையின் கோட்பாடுகளின்படி நடப்பதைத் தங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன என்று அறிந்து கொள்வது? சபையாக ஏற்றுக் கொண்டு விசுவாசித்து வரும் விசுவாச அறிக்கை இதற்குத் துணைபுரியும். இதனை ஏற்று இதன் அடிப்படையில் அமைந்துள்ள சபைகளோடு தொடர்பு கொண்டு வேதபூர்வமான மெய்யான ஐக்கியத்தில் வளர முடியும். திருமறையை அலட்சியப்படுத்தி பல்வேறு கோட்பாடுகளை மனம் போன போக்கில் பின்பற்றும் சபைகளோடு ஐக்கியத்தில் வளரும்படி திருமறை போதிக்கவில்லை. அவ்வாறு செய்வது கர்த்தருக்குப் பிடித்தமற்ற செயல். சமய சமரசக் கோட்பாட்டைப் பின்பற்றும் சமயக் கிளைகளும், கிறிஸ்தவ நற்செய்திக் கோட்பாட்டை அலட்சியம் செய்து ஏனோதானோவென்று சபைநடத்திக் கொண்டிருப்பவர்களுடனும் ஐக்கியத்தில் வருவது ஐக்கியத்தை உண்மையிலேயே அழிக்கும் செயலாகும்.

## *1689 விசுவாச அறிக்கை*

கோட்பாடுகளின் அவசியத்தை இதுவரை நாம் ஆராய்ந்தோம். ஆனால் இவ்வாறு திருமறையின் தெளிவான கோட்பாடுகளை விளக்கி நமக்குத் துணைபுரியக்கூடிய விசுவாச அறிக்கை எது என்ற கேள்வி ஏற்கனவே எழுந்திருக்கும். இதைக்குறித்துக் கடந்த இதழில் நாம் எழுதியிருந்தோம். ("திருச்சபை வளர்ச்சிக்கு திருமறைக் கோட்பாடுகள்" என்ற ஆக்கத்தைப் பார்க்க) முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு நமது முன்னோர்கள் சத்தியத்தையும், சபையையும் காக்கும் பொருட்டு இத்தகைய கோட்பாடுகளைத் தெளிவாக வேதபூர்வமாக ஆராய்ந்து எழுதிவைத்து தம் சந்ததிக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளனர். இதனையே பின்பு ஸ்பர்ஜன் தன் சபைக்கோட்பாடாக ஏற்று தாம் பின்பற்றும் சத்தியம் எது என்று உலகறிய அறிவித்தார். இன்று உலகெங்கும் நூற்றுக்கணக்கான சபைகள் ***1689*** விசுவாச அறிக்கை என்று அழைக்கப்படும் இவ்விசுவாச அறிக்கையைத் தமது சபை விசுவாச அறிக்கையாக ஏற்றுக்கொண்டுள்ளன. தற்காலத்தில் வழக்கிலிருக்கும் விசுவாச அறிக்கைகளில் இதுவே வேதசத்தியங்களைத் தெளிவாகவும், முறையாகவும் எடுத்து விளக்குவதாக உள்ளது. திருமுழுக்கு, சபைக்கோட்பாடுகள், நற்செய்தியை எடுத்துக் கூறுதலின் அவசியம் ஆகிய போதனைகளில் ஏனைய விசுவாச அறிக்கைகளைவிடச் சிறப்பான போதனைகளைக் கொண்டதாக இவ்விசுவாச அறிக்கை அமைகின்றது.

திருமறையின் தெளிவான அடிப்படை சத்தியங்களில் சபையார் கருத்தொற்றுமையற்றிருப்பதைக் கர்த்தர் அனுமதிப்பதில்லை. அடிப்படை சத்தியங்களல்லாதவற்றில் நமது தற்போதைய அறிவுக்கேற்ப நாம் கருத்து வேறுபாடு கொண்டிருக்கலாம் (***1 கொரி. 11:19; பிலி. 3:15***). அது கர்த்தருக்கு ஏற்புடையதாக இல்லாவிட்டாலும் நாம் முதிர்ச்சியடைந்து அவற்றிலும் உடன்பாடு காண வேண்டுமென்பதே அவரது அவா. அதேவேளை அடிப்படை சத்தியங்களல்லாதவற்றில் நாம் கொண்டிருக்கும் கருத்து வேறுபாடு சபையில் எந்தவித பாதிப்பையும் எற்படுத்தக்கூடாது என்பது அவரது கட்டளையாகவுள்ளது.

விசுவாச அறிக்கை சபை வளர்ச்சிக்கும், சபை வாழ்க்கைக்கும், ஐக்கியத்திற்கும் அத்தியாவசியமாயிருந்த போதும் அது திருமறைக்கு இணையான அதிகாரத்தைக் கொண்டிருப்பதில்லை. அது நாம் விசுவாசிக்கும் வேதபூர்வமான ஐயமற்ற சத்தியங்களை முறைப்படுத்தி விளக்கி நாம் வேத போதனைகளில் வளர துணைபுரியுமொரு சாதனம்.

(வளரும்)

# அருளுரைக்கு என் இன்று ஆபத்து

ாரம்பரியமாகவும், வேத அடிப்படையிலும் காலங்காலமாக சபைகளில் இரட்சிப்பின் வழிகளை எடுத்துரைக்கவும், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் வளம்பெறத் தேவையான போதனைகளை அளிக்கவும் பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் அருஞ்சாதனமான அருளுரைக்கு இன்று பல விதத்தில் ஆபத்து ஏற்பட்டுள்ளதை சபை சீர்திருத்தத்திலும், அருளுரையிலும் நம்பிக்கை வைத்துள்ளவர்கள் நிச்சயம் மறுக்க மாட்டார்கள். அருளுரை என்ற பெயரில் கதைகளையும், கேட்பவர்கள் உணர்ச்சி வசப்படும் விதத்தில் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி, இடையிடையே பாடல்களும் நுழைந்து வரும் ஒரு கலவையைக் கேட்டு செவிமடல்கள் புளித்துப் போய் நிற்கிறார்கள் இன்றைய தமிழ்க் கிறிஸ்தவர்கள். இது போதாதென்று பரவசக்குழுக்களைச் சார்ந்த பிரசங்கிகள் திருமறையைத் தூக்கி எறிந்து விட்டு தம் மனதுக்குத் தோன்றும் எதையும் சொல்லிக் கேட்பவர்களின் உணர்ச்சியைத் தூண்டி அவர்களை நர்த்தனமாடச் செய்து வருகிறார்கள். இது ஒரு பத்தாம் பசலிப் பாரம்பரியம் என்று அருளுரையையே ஒதுக்கிவிட்டு வேறு சாதனங்களுக்காக அலையும் போர்வழிகளும் சபைகளும்கூட உண்டு.

இத்தகைய நிலைமைக்குக் காரணம் என்ன? அருளுரை தரங்குன்றி, ஆண்டவரின் செய்தியைக் கேட்க வழியில்லாமல் நம் மக்கள் வாழும் நிலைக்கு விமோசனம்தான் உண்டா? திருமறை இதற்குத் தகுந்த பதில்களைத் தருகின்றது. எக்காரணங்கள் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சில பகுதிகளிலும் அதன்பின்பு வரலாற்றில் சில நூற்றாண்டுகளிலும் அருளுரையைத் தரங்குன்றச் செய்தனவோ அதே காரணிகள்தாம் இன்றும் நம்மத்தியில் அதனைத் தரங்குன்றச் செய்துள்ளன. இதை வாசிக்கும் போதகர்களும், கிறிஸ்தவ வாசகர்களும் பின்வரும் காரணங்களை ஜெபத்தோடு சிந்தித்து ஆராயுமாறு வேண்டுகிறேன். ஜோர்ஜ் விட்பீல்ட், மெக்சேயின், எட்வர்ட்ஸ் பெக்ஸ்டர், ஸ்பர்ஜன் போன்றவர்கள் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் தோன்றி சண்டமாருதப் பிரசங்கம் செய்யும் நாளுக்காக ஜெபிப்போமாக!

## அருளுரையாளனின் வாழ்க்கை

சாதாரண வேலைக்கு ஆள் எடுப்பவர்கள் கூட அவ்வேலைக்குத் தேவையான தகுதிகள் ஒருவரிடம் இருக்கிறதா என்று பார்க்கத் தவறுவதில்லை. ஆனால் போதக ஊழியத்திற்குத் தேர்ந்தெடுக்கப் படுபவர்களிடத்தில் இன்று ஆவிக்குரிய தகுதிகள் இருக்கின்றனவா



அருளுரையாளன்

என்று ஆராய்ந்து பார்க்கப்படுவதில்லை. அவரால் பேச முடியுமா, பாட முடியுமா என்று தான் ஆராய்கிறார்களே தவிர அவரது வாழ்வில் இயேசு மகிமைப்படுத்தப் படுகிறாரா? சபை மக்கள் மத்தியில் அவருக்கு சிறந்த கிறிஸ்தவன் என்ற மதிப்பும், மரியாதையும் இருக்கின்றதா? என்றெல்லாம் ஆராய்வதில்லை. ''ஒரு போதகனுடைய வாழ்க்கையே அவனது ஊழியத்தின் வாழ்க்கையாக அமையும்'' என்று ஒருவர் சரியாகவே கூறியிருக்கிறார். சிறப்பான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து சபையார் மத்தியில் மதிப்புப் பெறாதவர்கள் பிரசங்க ஊழியத்திற்குத் தகுதியுள்ளவர்களல்ல.

தீமோத்தேயு, தீத்து புத்தகங்கள் அருளுரையாளனுக்கு இருக்க வேண்டிய தகுதிகளைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. 1 தீமோத்தேயு 4:16 இல் பவுல், "உன்னைக்குறித்து. . எச்சரிக்கையாயிரு'' என்று வலியுறுத்திக் கூறுவதைப் பார்க்கிறோம். தனது ஆவிக்குரிய வாழ்க்கையில் கவனம் செலுத்தி, அது மற்றவர்களுக்கு உதாரணமாக இருக்கும்படியாக பார்த்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு அருளுரையாளனதும் முக்கிய கடமையாகும். "விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி'' என்று பவுல் தெசலோனிக்கேயருக்கு நினைவூட்டுகிறார்.

கர்த்தரோடு இடைவிடாத ஐக்கியம், திருமறையில் தெளிந்த ஞானம், பரிசுத்தமான வாழ்க்கை, ஜெபத்தில் உறுதி, ஊழியம் பற்றிய உயர்ந்த சுயநலமற்ற நோக்கம் என்பவையே ஒரு போதகனின் பிரசங்க ஊழியத்தை மேன்மையடையச் செய்யும் சாதனங்கள். அவருக்குப் பாட முடியுமா? அல்லது எவ்வளவு பெரிய மனிதனாக இருக்கிறார் என்பதல்ல முக்கியம். மேலை நாட்டிலும் சரி, தமிழர்கள் மத்தியிலும் சரி இன்று அருளுரை அலட்சியப்படுத்தப்படுவதற்கு அதில் ஈடுபட்டுள்ளவர்களின் தகுதிக் குறைவே காரணமென்பதில் எந்தளவும் சந்தேகமிருக்க முடியாது. போதக ஊழியம் தனக்கு பெருமை சேர்க்கும் என்று அதில் ஈடுபடுபவர்கள் தான் எத்தனை பேர்! பணம் சேர்க்க நல்லவழி என்று நெஞ்சிலீரமில்லாமல் அதில் நுழையப் பார்க்கிறவர்கள்தான் எத்தனை பேர்! போதக ஊழியத்தில் தன்னைக்குறித்து எச்சரிக்கையாக இல்லாமல் உள்ளத்

தையும், உடலையும் தூய்மையாக வைத்திராமல் மனந்தடுமாறிப் பெண்களின் தொடர்பால் பெயர் கெட்டுப் போனவர்கள்தான் எத்தனை பேர்! சினிமா நடிகர்களைப் போல அருளுரையாளர்கள் உள்ளொன்றுவைத்துப் புறமொன்றுபேசி வாழ்க்கை நடத்த முடியாது. இவ்வூழியத்திற்குத் தம்மைத் தயார் செய்து கொண்டிருக்கும் இளம் வாலிபர்களும், ஏற்கனவே போதகர்களாக இருக்கும் இளைஞர்களும் இன்று இவற்றைக் கருத்தோடு சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

அருளுரைக்கு இன்று ஏற்பட்டுள்ள பேராபத்திற்கு இன்றைய அருளுரையாளர்களில் பலரும் காரணமாகவிருப்பதை நம்மால் நிச்சயமாக மறுக்க முடியாது.

### அருளுரையின் தரம்

கிறிஸ்தவ அன்பர் ஒருவர் ஒருமுறை என்னிடம், "உங்களால் கதை சொல்லாமல், கண்ணீர் விடமாமல், பாட்டுப் பாடாமல் ஒரு மணி நேரம் வேதத்தை மட்டும் வைத்து எப்படிப் பேச முடிகின்றது" என்று கேட்டார். அவரது கேள்வியே அவருக்குப் பரிச்சயமான அருளுரை எப்படி இருந்திருக்கும் என்பதைத் தெளிவாக விளக்கியது. இன்று இதைத்தான் அநேகர் அருளுரை என்ற பெயரில் வாராவாரம் கேட்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்நிலை மாறாதா என்று ஏங்கும் நெஞ்சங்களும் இல்லாமலில்லை.

இன்று அருளுரையின் தரங் குன்றியிருப்பதற்கு நாம் பல காரணிகளைச் சுட்டிக் காட்டலாம்.

### வேதபூர்வமான அருளுரை

அருளுரை என்ற பெயரில் வழங்கப்படும் செய்திகளில் இன்று திருமறை குறைவாகக் காணப்படுகின்றது. வேதத்தில் இருந்து ஒரு வசனத்தை எடுத்துப் பேச முயற்சிக்கிறார்களே தவிர அவ்வசனத்தை அது அப்பகுதியில் எப்படிப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது? அதைக்குறித்து முழு வேதமும் என்ன சொல்கிறது? பேசுமுன் அவ்வசனத்தை சரிவரப் புரிந்து கொண்டிருக்கிறோமா? என்றெல்லாம் சிந்தித்துப் பார்க்கும் பிரசங்கிகள் மிகக் குறைவு. ஆரம்ப முதல் இறுதி வரை வேதம்தான் போதிக்கப்படுகின்றது என்ற உணர்வு கேட்பவர்களுக்கு ஏற்பட வேண்டும். ஓர் அருளுரை எவ்வளவுதான் அழகாக, காதைக்குளிர வைப்பதாக இருந்தாலும் அது தொடக்கமுதல் முடிவுவரை வேதபூர்வமானதாக இல்லாவிட்டால் அது அருளுரையாகவே அமையாது. இன்றைய பிரசங்கிகள் வேதத்தை முறையாகப் படிப்பது குறைவு. அதில் கவனம் செலுத்தாது ஊழியம் என்ற பெயரில் ஊர்க்காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தால் கர்த்தர் தம் மக்களை ஆசீர்வதிப்பது எப்படி? தனது சிந்தையை திருமறையால் நிரப்ப மறுக்கும் அருளுரையாளன் பரிசுத்த ஆவியின் துணையை எவ்வாறு நாட முடியும்?

அருளுரையாளர் ஒருவர் என்னிடம், நீங்கள் பிரசங்கத்தை எவ்வாறு தயார் செய்வது வழக்கம் என்று ஒருமுறை கேட்டார். நான் அதே கேள்வியை அவரையே திருப்பிக் கேட்டேன். தான் பிரசங்கிக்குமுன் ஒவ்வோருமுறையும் உபவாசமெடுத்து அதன்பின் பேசுவது வழக்கம் என்று பதிலளித்தார். இவ்வன்பர் வேதத்தை முறையாகப் படிக்காமல் அதில் நேரம் செலவிடாமல் தனது அருளுரைக்கு 'உபவாசத்தை' மட்டுமே நம்பி வந்தார். இப்படி அற்புதமாக, நேரடியாக, எந்தவிதத்திலும் உடல் நோகாமல் விண்ணிலிருந்து 'அருளுரை'யைப் பெற்றுக் கொள்ள முயலும் போதக அன்பர்கள் இன்று சபைகளை அலங்கரித்து வருகிறார்கள்.

**தனது சிந்தையை திருமறையால் நிரப்ப மறுக்கும் அருளுரையாளன் பரிசுத்த ஆவியின் துணையை எவ்வாறு நாட முடியும்?**

அருளுரை, அருளுரையாக அமைய முதலில் அது திருமறையால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். ஜெபமும், உபவாசமும்கூட அவசியம் தான். ஆனால் வாராவாரம் வேதத்தைப் படிக்காமல், அதை ஆராயாமல், அதை மட்டுமே போதிக்க வேண்டும் என்ற உணர்வில்லாமல் வெறுமனே ஜெபத்தையோ, உபவாசத்தையோ மட்டும் நாடி நிற்பது திருறை போதிக்கும் பிரசங்க ஊழியமல்ல.

### இறையியல்பூர்வமான அருளுரை

கோட்பாடுகளின் அவசியத்தை திருச்சபை குறித்த கட்டுரையில் இவ்விதழில் வலியுறுத்தியுள்ளோம். இன்று கோட்பாடுகளுக்கும் திருமறைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பது போல் கிறிஸ்தவர்கள் நடந்து கொள்கிறார்கள். இதற்குக் காரணமே சபைகள் அவற்றை நிராகரித்துவிட்டதுதான். சுருங்கக் கூறினால் கோட்பாடுகளை வெறுப்பவர்கள் திருமறையை வெறுக்கிறார்கள். திருமறை முழுவதும் கோட்பாடுகள் பரவி நிற்கின்றன. கடவுள் யார்? இரட்சிப்பு என்றால் என்ன? ஆவியானவர் யார்? அவர் எவ்வாறு செயற்படுகிறார்? திருச்சபை யாது? என்பது போன்ற வினாக்களுக்கெல்லாம் விடை தெரிய வேண்டுமானால் இறையியலும் கோட்பாடுகளும் அறிந்திருப்பது அவசியம். இவற்றையும், நமது மூதாதையர்கள் விளக்கமாக எழுதிவைத்துள்ள விசுவாச அறிக்கைகளையும் புறக்கணித்துவிட்டு நாமே விடைகளைத் தேடிக் கொள்ளலாம் என்று மார்தட்டுவது இறுமாப்பைத் தவிர வேறில்லை. தாழ்மையுணர்வுடைய எந்தப் பிரசங்கியும் தான் தன் மக்களுக்கு திருமறையைத் தவிர வேறெதையும் போதிக்கக்கூடாது என்ற தேவபயத்துடன் இவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி தனது கிறிஸ்தவ வாழ்விலும், ஊழியத்திலும் வளம் பெற முயற்சி செய்வான்.

அதுமட்டுமல்லாது கோட்பாடற்ற அருளுரை அருளுரையே அல்ல. ஏனெனில் அது சதையற்ற எலும்புக்கூட்டிற்கு சமமானதாகும். அருளுரையைத் திருமறைபூர்வமான கோட்பாடு அலங்கரிக்கின்றபோது பேசப்படுகின்ற பொருள் தரமானதாகவும், சத்தியமானதாகவும் அமைகின்றது. அதேவேளை நமது கோட்பாடுகளும், இறையியலும் திருமறையின் அடிப்படையில், திருமறையில் இருந்து மட்டுமே பெறப்பட்டதாக இருக்க வேண்டும். இவ்விதமாக அமைந்த **1689** விசுவாச அறிக்கையைப் படித்து அதில் தெளிவு பெறுவது திருமறையில் முறையான இறையியல் அறிவு பெற உதவும்.

### நடைமுறைக்குதவும் அருளுரை

அருளுரை நடைமுறைக்குப் பயன்படுவதாக அமைய வேண்டும். அதாவது நாம் திருமறையிலிருந்து எடுத்து விளக்கும் சத்தியங்கள் எந்த வகையில் நடைமுறைக்கு அவசியம், அதைக்கேட்பவர்கள் அதைக் குறித்துத் தங்கள் வாழ்க்கையில் என் செய்ய வேண்டும் என்று ஆணித்தரமாக எடுத்துரைப்பதாக இருக்க வேண்டும். இன்று பல பிரசங்கிகள் கேட்பவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்வதில் துடியாய் இருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் செய்யச்சொல்லும் காரியங்களை வேதத்தின் மூலம் நிரூபிப்பதில்லை. இதற்கு மாறாக திருமறையைக் கோட்பாடுகளுடன் திறம்படப் போதிப்பவர்கள் அது நடைமுறைக்குப் பயனுள்ளதாக அமையும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக இரட்சிப்பைக் குறித்து வேதபூர்வமாக விவரித்து விட்டு கேட்பவர்கள் அதைக்குறித்து என்ன செய்ய வேண்டும் என்று கூறாமல் விட்டு விட்டால் அந்தப் பிரசங்கத்தால் எந்தப்பயனுமில்லை. பரிசுத்த வாழ்க்கையின் அவசியத்தைப் பற்றி எடுத்துரைத்துவிட்டு அத்தகைய வாழ்க்கையை வாழ என்ன செய்ய வேண்டும் என்று இடித்துரைக்காவிட்டால் அது அருளுரையாகாது. பவுல் அப்போஸ்தலன் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில், நமது பிதாக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்று விளக்கி அவர்களில் பலர் தேவனிடத்தில் பிரியமாயிராததால் அழிக்கப்பட்டார்கள் என்று கூறி அத்தோடு நிறுத்தி விடாமல் "அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கின்றது" என்று கூறுவதைப் பார்க்கிறோம் *(1 கொரி. 10:1-6)*. இங்கே பவுல் வரலாற்று உண்மைகளை மட்டும் விவரிக்காது அவ்வுண்மைகளின் மூலம் நாம் படிக்க வேண்டிய பாடம் என்ன, அவற்றை நினைவுகூரி செய்ய வேண்டிய காரியங்கள் என்ன என்றும் போதிக்கிறார். வேதபூர்வமான அருளுரைகள் இவ்வாறே அமைய வேண்டும். சத்தியத்தை விளக்குவதோடு அச்சத்தியங்கள் கேட்போர் இருதயத்தைப் பிளந்து அதைக்குறித்து அவர்கள் நடவடிக்கை எடுக்கத் தூண்டுவதாக அமைய வேண்டும்.

அருளுரை என்ற பெயரில் இன்று சபைகளையும் மேடைகளையும் அலங்கரித்து வரும் அநேக வார்த்தை ஜாலங்கள் திருமறையின் அடிப்படையில் அமையாததோடு நடைமுறைக்குதவாததாகவும் உள்ளன. மேற்குறிப்பிட்ட அடையாளங்களைக் கொண்ட அருளுரையாளர்களும், அருளுரையும் திருச்சபைகளில் அன்றாடம் திருமறையை மகிமைப்படுத்தும் நாளுக்காக நாம் கர்த்தரிடம் மன்றாடுவது அவசியம். திருமறைபூர்வமான திருச்சபை வளர்ச்சியிலும், வளத்திலும் ஆர்வமுள்ளவர்கள் இவற்றைத் தவிர வேறெதையும் தம் வாழ்விலும், சபையிலும் அனுமதிக்கமாட்டார்கள்.

# பிரசங்கிகளுக்கான அறிவுரை

**✻ ஸ்பர்ஜன் ஐயர் ✻**

வேதவசனங்கள் சாதாரணமாக என்ன பொருளைக் கொண்டுள்ளனவோ அதன்படியே விளக்கப்படவேண்டுமே தவிர அவற்றை உருவகப்படுத்தக் (Allegory) கூடாது.

1. வலுக்கட்டாயமாக நியாயமற்ற வகையில் வசனத்தை உருவகப்படுத்தலாகாது. இது பொது அறிவுக்கே முரணான பாவமாகும். சில போதகர்கள் இவ்விதத்தில் வேத வசனங்களை மோசமாக திருமறைக்கு முரணான விதத்தில் பயன்படுத்தி அவை கூறாத பொருளைக் கூறி விளக்கி வருகின்றனர். ஞானிகளுக்கு மத்தியில் முட்டாளாகவும், முட்டாள்களுக்கு மத்தியில் ஞானியாகவும் நம்மை மாற்றக்கூடிய இத்தகைய சிறுபிள்ளைத்தனமான மோசமான உருவகப்படுத்தலைக் கைவிட வேண்டும்.

2. கடினமான வேதப்பகுதிகளை எப்போதுமே உருவகப்படுத்தலாகாது. உதாரணமாக உன்னதப் பாடல்கள், எரேமியா, எசேக்கியல் போன்ற நூல்களை விளக்கும்போது இளம் போதகர்கள் பொறுப்போடும் கவனத்தோடும் விளக்க வேண்டும்..

3. கேட்பவர்கள் நம்மை காணற்கரிய அறிவாளியென்று பாராட்ட வேண்டுமென்பதற்காக உருவகப்படுத்தலில் ஈடுபடக்கூடாது.

4. தேவவசனத்தோடு எதையும் சேர்ப்பதால் விளையும் பாவத்தை சுமக்காதிருக்க, வசனத்தை மாற்றி அது சொல்லாத விடயத்தைச் சொல்லி உருவகப்படுத்தலாகாது. வில்லியம் ஹன்டிங்டன் என்பவர் பத்தாவது கட்டளையான 'விபச்சாரம் செய்யாதிருப்பாயாக' என்பதை மாற்றி 'முன்குறிக்கப்படாதவனின் மனைவி மேல் இச்சை வையாதே' என்று கூறுவதாக விளக்கமளித்தார். இதை விட மோசமான வியாக்கியானம் வேறெதுவும் இருக்க முடியாது.

5. வேதத்தில் இருந்து நீங்கள் விளக்கப்படுத்தும் கதைப்பகுதிகள் உண்மைச் சம்பவங்கள் என்பதைக் கேட்பவர்கள் எப்போதும் மறக்காதிருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒருமுறை நான் கேட்ட பிரசங்கத்தை என்னால் விளக்காமலிருக்க முடியாது. படிப்பறிவில்லாத ஒரு நல்லமனிதர் ஒருமுறை பிரசங்கித்தபோது பேச எடுத்துக் கொண்ட தலைப்பு "இராச்சுற்றிப் பறவை, ஆந்தை, குயில்" என்பதாகும். இம்மூன்றைப் பற்றியும் விவரித்த பிரசங்கியார், இம்மூன்று பறவைகளும் நியாயப்பிரமாணத்தின் கீழ் அசுத்தமான பறவைகள் என்றும் அவை பாவிகளான மனிதர்களைக் குறிப்பதாகவும் பொருள் கூறினார். இவற்றை மேலும் விளக்கிய பிரசங்கி, இராச்சுற்றிப் பறவைகள் தமது சொத்தைத் தவறான வழிகளில் பயன்படுத்தி, பிறரையும் ஏமாற்றி எவரும் சந்தேகிக்காதவிதத்தில் வாழ்க்கை நடத்தும் ஏமாற்றுக்காரர்கள் போன்றவை என்று சித்தரித்தார். ஆந்தைகளோ, இரவில் கூத்தாடிப் பகலில் போகுமிடம் தெரியாமல் முன்னால் இருப்பவற்றின் மீது முட்டி மோதிக் கொள்ளும் குடிகாரர்களைப் போன்றவை என்றார். பார்வைக்கு மட்டும் கிறிஸ்தவர்களைப்போலத் தென்படும் சிலரும் ஆந்தைகளைப் போன்றவர்களே; ஏனெனில் ஆந்தை உண்மையிலேயே மிகச்சிறிய பறவை; அதன் சிறகுகள் அதிகமாக இருப்பதாலேயே அது பார்வைக்குப் பெரிதாகத்தென்படுகின்றது. இதைப் போன்றவர்களே பெயர்க் கிறிஸ்தவர்களும். இறுதியாக சில போதகர்கள் குயில்களைப் போன்றவர்கள். அவர்கள் எப்போதும் குயில்களைப் போல சபைகளில் ஒரே பாட்டைத்தான் பாடிக் கொண்டிருப்பார்கள். அது மட்டுமல்ல; பிற பறவைகளின் முட்டைகளைத் தின்று வாழும் குயில்களைப்போல சபைக் காணிக்கைகளிலும், பணத்திலும் வாழ்க்கை நடத்துவதே அவர்கள் வழக்கம் என்று கூறி முடித்தார். கேட்பவர்கள் கவனத்தைக் கவர வேண்டும் என்பதற்காக வேதத்திற்கு முரணான விதத்தில் இப்பிரசங்கியைப்போல உருவகப்படுத்தலாகாது.

# அருளுரை

## - ஒரு விளக்கம் -

அருளுரை பிரசங்கம் எனவும் அழைக்கப்படும். பிரசங்கம் என்பது உலகந்தோன்றிய நாள்முதல் மனிதர்களின் வழக்கில் இருக்கும் ஓர் செய்தித் தொடர்புச் சாதனம். உலகம் பெரும் பிரசங்கி களைச் சந்தித்துள்ளது. இதில் நல்ல வர்களும் கூடாதவர்களும் அடங்கு வர். நல்ல நோக்கத்திற்காகவும், தீய நோக்கத்திற்காகவும் இது பயன்படுத் தப்பட்டுள்ளது. இருந்தாலும் நாம் வித்தியாசமான ஒரு பிரசங்கத்தை இங்கே கவனிக்கிறோம். சாதாரண மாக உலக வழக்கிலிருக்கும் பிரசங் கத்தையல்ல, கர்த்தரால் பயன் படுத்தப்படும் ஓர் அற்புத சாதனத்தை, அருளுரையைக் குறித்து சிந்திக்கி றோம்.

மக்கள் மத்தியில் வழக்கிலிருக் கும் பிரசங்கத்திற்கும் அருளுரைக்கும் அப்படி என்ன வித்தியாசம்? இவ் வித்தியாசம் அச்சாதனத்தில் தங்கியி ராமல் அதைப் பயன்படுத்தும் கர்த்தரி லேயே தங்கியுள்ளது. சாதாரணமான பிரசங்க வல்லமையைப் பயன்படுத்தி பல பொய்களைக்கூறி மக்களை ஏமாற்றி 'கொயபல்ஸ்' ஹிட்லருக்குப் பெரும் வெற்றிகள் ஈட்டித் தந்தான். பாவமுள்ள மனிதனால் பயன்படுத் தப்படும்போது பிரசங்கம் பெருமை யற்று நிற்கிறது. ஆனால் இதையே கர்த்தர் பயன்படுத்தும்போது அதற் கும் அதைப் பயன்படுத்துபவருக்கும் பெருமை தேடி வருகிறது.

பிரசங்கத்திற்கு வேதத்தில் 'அதிகாரபூர்வமாக எடுத்துச் சொல்லு தல்' என்று பொருள். அவ்வதிகாரம் பேசுபவரிடத்தில் இல்லாமல் கர்த் தரிடத்தில் இருந்து வருவதாகவும், பேசப்படும் வாத்தையிலும் உள்ளது. தனது வார்த்தையை அதிகார பூர்வமாகப் பயன்படுத்துவதற்கு கர்த்தர் பிரசங்கத்தையே தெரிந்தெடுத் துள்ளார் (ரோமர் 10). அவரது வார்த்தையை எடுத்துச்சொல்ல பிற சாதனங்களையும் நாம் பயன்படுத்த முடிந்தாலும் (கலந்துரையாடல், போதித்தல்) இதையே பிரதானமான தாக கர்த்தருடைய வார்த்தை கருது கின்றது. போதகர்கள் திருமறையில் அதிக கவனம் செலுத்திக் கருத்துடன் வாசித்து அருளுரை செய்வதையே கர்த்தர் விரும்புகிறார். அவர்கள் தமது ஊழியக்கால முழுவதையும் இதற்கே அர்ப்பணிக்க வேண்டுமென்பது அவரது விருப்பம். ஏனெனில் அவ் ஊழியத்தின் மூலம் கிறிஸ்தவ வாழ்வில் அவரது குழந்தைகள் வளம் பெற இடையறாது தொடர்ந்து பிரசங்கத்தை அவர்கள் கேட்க வேண்டியது அவசியம். அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நடைமுறைக் கலாச்சாரத்திற்கு ஏற்புடையதாக இருந்தாலும் இல்லா விட்டாலும் இதன் மூலமே கர்த்தர் தன் சபையைக் கட்டியெழுப்புகிறார்.

இன்று பிரசங்க ஊழியத்தில் பலர் நம்பிக்கையிழந்து காணப்படு கிறார்கள். அதற்குக் கொடுக்க வேண்டிய நேரத்தைக் கொடுக்காமல் வேறுகாரியங்களில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். சபை மக்களை நாடிச்சென்று அவர்கள் நலன்களைக் கவனிப்பது, தேவையானபோது முறையான அறிவுரைகளை வழங்கு வது போன்றவை அவசியமெனிலும் பிரசங்க ஊழியமே இவற்றிற்கெல்லாம் ஆதாரமாகவும், முதன்மையான தாகவும் அமைய வேண்டுமென்பது திருமறையின் எதிர்பார்ப்பு. பிரசங் கத்தால் செய்ய முடியாத தொன்றை வேறு வழிகளில் செய்ய முயல்வது கர்த்தருடைய வழிகள் சரியல்ல என்று கூறுவதற்கு ஒப்பானது. சபை மக்களின் நலன்களைக் கவனிக்க அவசியமான ஏனைய வழிகளின் பயன்களனைத்தும் அம்மக்கள் இடை யறாது பெறும் முறையான, விசுவாச முள்ள பிரசங்கத்திலேயே தங்கியுள் ளது. கிறிஸ்து தன் வாழ்நாள் முழுதும் பிரசங்கத்தில் அதிக கவனம் செலுத் தினார். இதையே அப்போஸ்தலர் களும் தொடர்ந்து கடைப்பிடித்தனர் இன்று பல சபைகளில் பரிசுத்த ஆவியின் உண்மையான வல்லமை யில்லாது காணப்படுவதற்கு அங்கெல் லாம் வல்லமையுள்ள, திருமறையின் அடிப்படையில் அமைந்த அருளுரை யில்லாததே காரணம்.

**மரணத்தருவாயிலிருக்கும் மக்களுக்கு மரித்துக் கொண்டிருப்பவனைப்போல நான் பிரசங்கம் செய்ய விரும்புகிறேன்.**

*- ரிச்சட் பெக்ஸ்டர் -*

**பிரசங்கமென்பது அக்கினி கொழுந்துவிட்டெரியும் ஒரு மனிதனில் இருந்து வெளிப்படும் இறையியற் கோட்பாடு.**

*- மார்டின் லொயிட் ஜோன்ஸ் -*

**கேட்பவர்களின் செவிகளைக் குளிரச் செய்பவனல்ல, அவர்களின் இதயத்தைப் பிளப்பவனே சிறந்த பிரசங்கி.**

*- தொமஸ் புரூக்ஸ் -*

**கிறிஸ்துவை கிறிஸ்துவிற்காகவே பிரசங்கிக்கும் வரை ஒருவன் விசுவாசமுள்ள போதகனாக இருக்க முடியாது.**

*- மரே மெக்செயின் -*

**பிரசங்க மேடையே திருமறையின் இராஜ பீடம்.**

*- மார்டின் லூதர் -*


**சந்தேகத்துக்கிடமில்லாமல் திருச்சபையின் இன்றைய முக்கியத் தேவை பிரசங்கம் என்று சொல்வேன்; திருச்சபைக்குப் பிரதானமானதும் அவசியமானதுமட்டுமல்ல முழு உலகுக்குமே தேவையானதும் கூட.**

*- மார்டின் லொயிட் ஜோன்ஸ் -*

**கட்டளையைவிட ஓர் உதாரணம் வலிமைமிக்கது. ஆண்டவருடைய தினத்தில் நான் என்ன சொல்கிறேன் என்பதைப் புரிந்து கொள்ள மக்கள் என்னை வாரத்தின் ஆறு நாட்களும் அவதானிக்கிறார்கள்.**

*- ரிச்சர்ட் செசில் -*

# வில்லியம் கேரி



**'கர்த்தரிடமிருந்து பெருங்காரியங்களை எதிர் பாருங்கள்; கர்த்தருக்காகப் பெருஞ்சாதனைகளைச் செய்யுங்கள்' என்று கூறி, வாழ்நாளெல்லாம் கர்த்தருக்கே மகோன்னதமாக சேவை செய்தவரும், நவீனகால அருட்பணி ஊழியத்திற்கு அடிக்கல் நாட்டியவருமான வில்லியம் கேரியின் வாழ்க்கைச் சரிதம்.**

கேரியின் 'விசாரணை' என்ற சிற்றேட்டைக் குறித்து கடந்த இதழில் பார்த்தோம். இதை எழுத கேரி மேற்கொண்ட நடவடிக்கைகள், அதன் உள்ளடக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடாவிட்டால் கேரியையும், கேரியின் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த ஊழிய வாஞ்சையையும் நாம் பூரணமாகப் புரிந்து கொள்ள முடியாது. ஊழியத்தைப் பற்றிய அரைகுறை ஞானமும், உலகப்பிரகாரமான எண்ணங்களும் பலரது உள்ளங்களில் அலவீசிக் கொண்டிருக்கும் இக் காலத்தில் கேரியின் விடாமுயற்சியும், சபைக்குக் கட்டுப்படும் தாழ்மையுணர்வும் பேருதாரணங்களாக அமைகின்றன என்பதில் சந்தேகமேயில்லை.

லெஸ்டர் நகரத்தில் போதகராக நியமனத்தை ஏற்ற கேரி தனது சிற்றேடான 'விசாரணையை' சாமுவேல் பியர்ஸின் வேண்டுகோளின்படி ஒரு சிறு குழுவுக்கு முன் வாசித்தார். ரைலன்ட், சட்கிளிப், புளர், பியர்ஸ் எல்லோரும் ஆர்வத்துடன் கேட்க அவரைச் சுற்றி வர அமர்ந்திருந்தனர். தம்மைச் சுற்றி அமர்ந்திருந்தவர்களைப்போல் வாழ்க்கையில் அதிக வசதிகளையோ வாய்ப்புகளையோ பெறாதிருந்தபோதும், வேதபூர்வமாகவும், வரலாற்று அடிப்படையிலும் கர்த்தரின் நற்செய்திப் பாதையை அவர்கள் முன் விபரித்தார் வில்லியம் கேரி. கேரியின் கடந்த எட்டு வருடகால வாசிப்பும், சிந்தனையும், விடாமுயற்சியும் இந்த எண்பத்தியேழு பக்கங்கள் கொண்ட சிற்றேட்டில் அடங்கியிருந்தன. வாசிக்கவோ, சிந்திக்கவோ மறுக்கும் ஆனால் ஊழிய வாஞ்சைக் கிரக்கம் மட்டும் தலைக்கேறியுள்ளவர்கள் இன்று கேரியின் வாழ்க்கையை எண்ணிப் பார்க்க வேண்டும்

சிற்றேடு இவ்வாறு ஆரம்பித்தது. 'வெள்ளத்தாலோ அல்லது வேறெந்த நியாயத்தீர்ப்பினாலோ கடவுள் பாவத்தை தீர்க்கப் போவதில்லை. அவர் மக்களை இன்று கிறிஸ்துவின் சிலுவையின் கிருபை மூலமாக அழைக்கிறார். அப்போஸ்தலர்கள் இச்செய்தியையே பிரசங்கித்தனர். அதையே வரலாறு கண்ட கிறிஸ்தவர்களும் செய்துவந்துள்ளனர். பணத்தாசை, உலக வாழ்க்கை மயக்கங்களிலிருந்து விடுபட்டு கிறிஸ்தவர்கள் இன்று இதையே செய்ய வேண்டும்.'

இச்சிற்றேடு நற்செய்தி ஊழியத்தின் சகலவிதமான அம்சங்களையும் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் துல்லியமாக ஆராய்ந்து அநேக விபரங்களைத் தந்தது. முதலில் நற்செய்தி ஊழியம் ஏன் இன்று எல்லோருடைய பொறுப்பாகவும் உள்ளது என்று வேத பூர்வமான வாதங்களை சமர்ப்பித்தது. 'கர்த்தருடைய கட்டளைகளை நிறைவேற்ற

**சான்றோர் சரிதம்**

மறுத்தால் அவரது வாக்குத்தத்தங்கள் நமக்கு சொந்தமானதல்ல' என்று வாதிட்டது. சிற்றேட்டின் விமர்சனப் பகுதி அப்போஸ்தலருடைய கால முதல் இவ்வூழியம் எவ்வாறு நடந்தது, யாரால் நடத்தப்பட்டது போன்ற விளக்கங்களைத் தந்தது. அகஸ்தின் முதல் பிரெய்னாட்வரை அநேகருடைய பெயர்ப் பட்டியலும் அவர்களுடைய ஊழிய விபரங்களும் இருந்தன. இதுவே உலக மிசனரி ஊழியங்களைப்பற்றி விவரித்த முதல் முயற்சியாகும். அக்காலத்தில் இத்தகைய விபரங்கள் அநேகருக்குத் தெரியாதிருந்தது. ஆனால் கேரி தனது சுய முயற்சியால் இவற்றை ஆராய்ந்து விபரமாகத் தந்திருந்தார்.

அத்தோடு விளக்கமான ஒரு வரைபடத்தையும் விசாரணை கொண்டிருந்தது. அதில் அந்தந்த நாட்டில் மக்கள் தொகை எவ்வளவு? எந்த இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற விபரங்களையெல்லாம் கேரி தந்திருந்தார். தொண்ணூற்றி ஒன்பது தடவை அவ்வரைபடத்தில் 'அந்நியர்கள்' என்ற வார்த்தையையும், ஐம்பத்தி மூன்று தடவைகள் 'முகமதியர்கள்' என்று எழுத வேண்டியிருந்ததைக் குறித்துக் கேரி பெருமளவு வருந்தினார். இவ்வாறு உலகெங்கும் கடவுளை அறியாதிருந்த மக்களுக்காக கேரி கண்ணீர் சிந்தினார்.

இறுதியாக விசாரணை இத்தகைய விபரங்களோடு அதை வாசிப்பவர்களுடைய கடமையை உணர்த்தியது. எலியட்டும், பிரெய்னாட்டும் அமெரிக்க இந்தியர்களை நற்செய்தி ஊழியமூலமாக தேவனை அறியச் செய்ய முடியுமானால் நம்மால் ஏன் முடியாது என்று வாதித்தார் கேரி. அதற்கான வழிகளையும் கேரி சிந்திக்கத் தவறவில்லை. கண்ணை மூடிக் கொண்டு ஊழியம் செய்ய எத்தனிக்கவில்லை கேரி. எத்தகைய மனிதர்கள் எத்தகைய ஊழியத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்று அவர்களுக்கான தகுதிகளையும் குறிப்பிட்டிருந்தார். திருமறை அறிவிலே நல்ல முதிர்ச்சியுள்ளவர்களும் ஜெபத்திலே உறுதியுள்ளவர்களுமே தெரிவு செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார். வாழ்க்கையில் சுகத்தை நாடுபவர்களுக்கும் ஊழியத்திற்கும் தொடர்பில்லை என்று வாதிட்டார்.

நமக்கு முன்னிருக்கும் இப் பெருங்கடமையை நிறைவேற்ற என்ன செய்ய வேண்டும் என்று விளக்கும் விசாரணை ஜெபத்தின் வல்லமையை உணர்த்தியது. சகரியா **12, 13** அதிகாரங்களில் காணப்படுவதைப் போன்ற ஜெபங்களின் மூலமாகத் தான் சகல ஆசீர்வாதங்களும் வந்து சேரும் என்று வலியுறுத்தியது. அது மட்டுமல்ல நாம் இம்முயற்சிக்கான தகுந்த திட்டங்களையும் வகுத்து அவற்றை நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தியது. இன்றைய மிஷனரிகளையும், ஊழியக்காரர்களையும் வெட்கப்பட வைக்கும் தன்னல மற்ற பெருமுயற்சி கேரியின் 'விசாரணை'.

(வளரும்)

# கிருபையின் போதனைகள்

கடந்த இதழில் ஆர்மீனியக் கோட்பாடுகளுக்கு பதிலுரையாக டோர்ட் சமயப் பேரவையினால் கொண்டுவரப்பட்ட ஐங்கோட்பாட்டினை சுருக்கமாகப் பார்த்தோம். கிருபையின் போதனைகளை உள்ளடக்கி எழுந்ததே இவ்வைங்கோட்பாடு. ஆகவே இதனைக் கிருபையின் போதனைகள் என்றும் அழைப்பது வழக்கம். கிருபையின் போதனைகளை விளக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ள இப்பகுதி இவ்வைங்கோட்பாடுகளைப் பின்பு விளக்கமாக ஆராயவிருக்கிறது. அதற்கு முன்பாக நடைமுறையில் இருக்கும் சில தப்பபிப்பிராயங்களை நாம் தீர்த்துக் கொள்வது நல்லது.

## கிருபையின் கோட்பாடுகளும், சீர்திருத்தக் கோட்பாடுகளும்

இன்று கிருபையின் கோட்பாடுகளைப் பின்பற்றும் அல்லது வரவேற்கும் சிலர் அவற்றையே சீர்திருத்தக் கோட்பாடுகள் என்றும் முடிவு கட்டிவிடுகின்றனர். சீர்திருத்தக் கோட்பாடுகளின் ஒரு பிரதான அங்கமாக கிருபையின் போதனைகள் அமைகின்றன என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் சீர்திருத்தக்

**'கிருபையின் போதனைகள்' என்ற சொற்றொடர் பலருக்குப் புதிதாக இருக்கலாம். சிலர் அது குறித்துக் கேள்விப்பட்டிருக்கலாம். மேலும் சிலர் அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தும், அதில் தெளிவில்லாது இருக்கலாம். இக்கட்டுரை இப்போதனைகளை திருமறையின் அடிப்படையில் சரித்திர பூர்வமாக ஆராய்ந்து அறிமுகப்படுத்துகிறது.**

கோட்பாடுகள் கிருபையின் கோட்பாடுகளைவிட மிகப் பெரியது. கிருபையின் கோட்பாடுகளை மட்டும் வரவேற்பதால் ஒருவர் சீர்திருத்தக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கிறார் என்று கூறிவிட முடியாது.

கிருபையின் கோட்பாடுகள் இரட்சிப்பிற்கான வழிவகைகளை ஏற்படுத்தியதிலும், அதை அளிப்பதிலும் கர்த்தரே நூற்றுக்கு நூறுவீதம் இறைமையுள்ளவராக இருக்கிறார் என்று போதிக்கின்றது. ஆகவே அத்தகைய வாழ்க்கையை ஒருவருக்கு அளிக்கும் கர்த்தர் அதை இறுதிவரை கரை சேர்ப்பதிலும் இறைமையுள்ளவராக உள்ளார் என்று இப்போதனைகள் விளக்குகின்றன. ஆனால் இக்கோட்பாடு சீர்திருத்தவாதக் கோட்பாடுகளின் ஒரு பகுதி மட்டுமே. சீர்திருத்தக் கோட்பாடு இவற்றின் மீது மட்டுமல்லாது கர்த்தரின் பூரண அதிகாரம் பரந்தளவில் எல்லாவற்றின் மீதும் இருப்பதாக வலியுறுத்துகிறது. தனிமனித இரட்சிப்பு மட்டுமன்றி, திருச்சபை, இவ்வுலக நடவடிக்கை எல்லாவற்றின் மீதும் கர்த்தருக்குள்ள அதிகாரப் பரவலையும், அவரது வார்த்தையின் படி அனைத்துக் காரியங்களும் நடக்க வேண்டிய அத்தியாவசியத்தையும் சீர்திருத்தக் கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன. ஆகவே ஒரு சபையோ அல்லது ஒரு கிறிஸ்தவரோ தாம் இது வரை பின்பற்றிய ஆர்மீனியப் போதனைகளைத் துறந்துவிட்டு கிருபையின் போதனைகளைப் பின்பற்றுவதால் அவர்கள் சீர்திருத்தவாதக் கோட்பாடுகளை முழுமையாக அறிந்திருக்கிறார்கள் என்றோ அல்லது அதைப் பின்பற்றுகிறார்கள் என்றோ முடிவு கட்டிவிட முடியாது. உதாரணமாக கிருபையின் போதனைகள் கர்த்தரின் இரட்சிப்புக்குரிய அம்சங்களைத் தவிர வேறுவிடயங்களை விவரிப்பதில்லை. இன்று சிலர் கிருபையின் போதனைகளை அது திருமறை போதிக்கும் தெளிவான போதனை என்று இருகரம் நீட்டி வரவேற்ற போதும் சீர்திருத்தக் கோட்பாடுகளை அலட்சியப்படுத்தி வருவதைக் காண முடிகின்றது. இவர்களில் சிலர் கடவுளின் நியாயப் பிரமாணத்தையும் (The Law of God), திருச்சபைக் கோட்பாடுகளையும் அலட்சியம் செய்து கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அவை இன்று அவசியமில்லை என்றவிதத்தில் நடந்து வருகிறார்கள். ஆகவே கிருபையின் போதனைகளை ஒருவர் அறிந்திருப்பதாலோ அல்லது பின்பற்றுவதாலோ அவர் சீர்திருத்தக் கோட்பாடுகளைப் பின்பற்றுகிறார் என்று முடிவு கட்டிவிட முடியாது. சீர்திருத்தப்பாதையில் செல்வதற்கு இது முறையான ஆரம்பமாக இருக்கலாம், ஆனால் திருமறையின் அதி

**கிருபையின் போதனைகள் சீர்திருத்தக் கோட்பாடுகளின் ஒரு பகுதி மட்டுமே; அவையே சீர்திருத்தக் கோட்பாடுகளாகிவிடாது**

காரத்திற்குட்பட்டு தன் வாழ்க்கையின் சகல துறைகளையும் சீர்திருத்தத்திற்கு உட்படுத்தாதவரை அவர் ஒரு சீர்திருத்தவாதியாகிவிட முடியாது.

ஜே. ஐ. பெக்கர் என்ற இறையியல் வல்லுனர் கிருபையின் போதனைகளைவிடப் பெரிதான சீர்திருத்தக் கோட்பாடுகள்பற்றி விளக்கும்போது, "சீர்திருத்தவாதக் கோட்பாடு (*பெக்கர் சீர்திருத்தக் கோட்பாடுகளை இங்கே 'கல்வினிசம்' என்று பெயரில் தொடர்ந்து அழைக்கிறார். சீர்திருத்த காலத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவராக கல்வின் இருந்ததும், அதன் போதனைகளுக்கு வடிவம் தந்த சிற்பிகளில் முதன்மையானவராக அவர் அமைந்ததுமே இதற்குக் காரணம்.*) ஐங்கோட்பாடுகள் குறிப்பிடுவதைப் பார்க்கிலும் அதிக விசாலமானது. முழு உலகத்தின் படைப்பாளியாகவும், ராஜாவாகவும் கடவுளைக் காண்கிற ஒரு தெளிவான தரிசனத்திலிருந்து தோன்றியதே இவ்வுலகளாவிய கோட்பாடான சீர்திருத்தவாதக் கோட்பாடு. தனது சித்தத்தின் ஆலோசனையின்படி அனைத்துக் காரியங்களையும் நிறைவேற்றும் சிருஷ்டிகரைக் கர்த்தாவாக முரண்பாடற்ற விதத்தில் அங்கீகரிக்கும் ஒரு முயற்சியே சீர்திருத்தவாதக் கோட்பாடாகும். முழு வாழ்க்கையும் கடவுளின் வார்த்தையின் கட்டுப்பாட்டிற்கும் வழிநடத்தலுக்கும் கீழானதாக இறைவனை மையமாகக் கொண்டு சிந்திக்கும் ஒரு வழிமுறையே இக் கோட்பாடாகும். இன்னொருவிதத்தில் கூறப்போனால், சீர்திருத்தக் கோட்பாடு திருமறையை


அடிப்படையாகக் கொண்டு திருமறையின் இறையியலை அவதானிக்கின்றது எனக்கூறலாம். எல்லாவற்றிற்கும் ஆரம்பமாகவும், ஆதாரமாகவும், முடிவாகவும் கடவுளைக் காண்கிற - அவரை மையமாகக் கொண்ட ஒரு கண்ணோட்டமே சீர்திருத்தக் கோட்பாடு." என்று விளக்குவதோடு "ஐங் கோட்பாடு தேவன் தனி மனிதனை மீட்பதில் இறைமையுள்ளவர் என்று மட்டுமே கூறுகிறது. ஆனால் சீர் திருத்தக் கோட்பாடோ பரந்த அளவில் அவரது அதிகாரம் எங்கும் உள்ளதாகப் பறைசாற்றுகிறது.'' என்றும் கூறுகிறார்.

இதிலிருந்து சீர்திருத்தக் கோட்பாடுகளுக்கும் கிருபையின் கோட்பாடுகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நாம் உணர முடிகின்றது. இரட்சிப்பின் அம்சங்களைப் பற்றிப் போதிக்கும் கிருபையின் போதனைகள் நிச்சயமாக சீர்திருத்தக் கோட்பாடுகளின் ஒரு அங்கமாக இருந்த போதும் அவை மட்டுமே சீர்திருத்தக் கோட்பாடுகளாகிவிடாது. இத்தகைய தவறான அபிப்பிராயத்தை இன்று புதிதாகக் கிருபையின் போதனைகளை அறிந்து கொண்டுள்ளவர்கள் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. கர்த்தரை மகிமைப்படுத்தும் விதத்திலும், திருமறையின் அடிப்படையிலும் இரட்சிப்புப் பற்றிய கிருபையின் போதனைகள் அமைவது எந்தளவுக்கு அவசியமோ, அதேவகையில் திருமறை சார்பான கிறிஸ்தவத்தை நாம் பின்பற்ற சீர்திருத்தக்

***கிருபையின் போதனைகளைப் பின்பற்றும் அனைவரும் சீர்திருத்தக் கோட்பாடுகளைப் பின்பற்றுகிறார்கள் என்று சொல்ல முடியாது.***

கோட்பாடுகளும் அவசியம். இவை இரண்டும் ஒன்றே அல்ல. சீர்திருத்தக் கோட்பாடுகளை முழுமையாகக் கைக்கொள்ளுகிறவர்கள் மத்தியில் கிருபையின் போதனைகள் காணப்பட்டாலும், கிருபையின் போதனைகளைக் கடைப்பிடிக்கும் எல்லோருமே சீர்திருத்தக் கோட்பாடுகளைப் பின்பற்றுகிறவர்கள் என்று எதிர்பார்க்க முடியாது. இதை நாம் தெளிவாக அறிந்திருப்பது சீர்திருத்தக் கோட்பாடுகளையும், கிருபையின் போதனைகளையும் சரிவரப் புரிந்து கொள்ளத் துணை செய்யும். (வளரும்)

# வினாவிடை முறையிலமைந்த



# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

*கிறிஸ்தவர்கள் சீர்திருத்தவாத காலத்திலிருந்தே 'திருமறைக்கல்வி' என்று அழைக்கப்படுகின்ற வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாட்டுப் பாடமுறையை அறிந்திருந்தனர். மார்ட்டின் லூதர் 1529-ல் இரண்டு திருமறைக்கல்விப் பாடநூல்களை எழுதினார். 1541-ல் ஜோன் கல்வினின் திருமறைக்கல்விப் பாடநூல் ஜெனீவா சபையில் பயன்படுத்தப்பட்டது. 1563-ல் வெளியிடப்பட்ட 'ஹெயிடில்பர்க் திருமறைக்கல்வி நூல்' அதுவரை வெளியிடப்பட்டவற்றில் சிறந்தொன்றாக விளங்கியது. 1647-ல் 'வெஸ்ட்மின்ஸ்டர் அசெம்பிளி' தனது விசுவாச அறிக்கையை மட்டுமன்றி, அதன் சாராம்சத்தையும் 'சுருக்கமான திருமறைக்கல்வி' நூலாகவும் வெளியிட்டது. ரிச்சர்ட் பெக்ஸ்டர், மத்தியூ ஹென்றி போன்ற கிறிஸ்தவ அறிஞர்கள் தங்கள் சபை மக்களுக்கு திருமறைக்கல்வி மூலமாக கிறிஸ்தவப் போதனையை உணவாக ஊட்டி வளர்த்தனர். பாப்திஸ்துகள் மத்தியில் இதனைப் பயன்படுத்தியவர்களில் பென்ஜமின் கீச், ஜோன் பன்யன், சி. எச். ஸ்பர்ஜன் ஆகியோர் முக்கியமானவர்கள். ஸ்பர்ஜன் 1889-ல் திருமறையின் போதனைகளைத் தன்சபை மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்து '1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கையையும்', வெஸ்மின்ஸ்டர் திருமறைக்கல்வி நூல், பென்ஜமின் கீச்சின் திருமறைக்கல்வி நூல் ஆகியவற்றைத் தழுவிய திருமறைக்கல்வி நூல் ஒன்றையும் வெளியிட்டார்.*

*கேள்வி 26: கிறிஸ்து எவ்வாறு ஆசாரியராகிய பணியினைச் செய்கிறார்?*

*பதில்: கிறிஸ்து தேவநீதியைச் சமாதானப்படுத்தும் பலியாகத் தன்னை ஒப்புக் கொடுப்பதன் மூலமும், கடவுளோடு நம்மை ஒப்புரவாக்குதலின் மூலமும், நமக்காகத் தொடர்ந்து மன்றாடுதலின் மூலமும் ஆசாரியராகிய பணியினைச் செய்கிறார்.*

*(எபிரேயர் 9:28; 2:17; 7:25)*

**விளக்கக்குறிப்பு:** இவ்வினாவிடை மூலம் நாம் பலராலும் தவறாகப்புரிந்து கொள்ளப்பட்டுள்ள திருமறை போதிக்கும் சீர்திருத்தக் கோட்பாடான 'வரையறுக்கப்பட்ட பிராயச்சித்தத்தைப்' பற்றி அறிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். 'வரையறுக்கப்பட்ட' (Limited) என்ற வார்த்தை பலருக்கு ஏற்புடையதாக இல்லாமலிருக்கின்றது. இருந்தாலும் இவ்வார்த்தை வேதத்தின் முக்கிய போதனைகளில் ஒன்றான, கிறிஸ்து பரிகாரப் பலியாக எல்லா மனிதர்களுக்காகவும் அல்லாமல் சிலருக்காகவே மரித்தார் என்பதைக் குறிப்பிடுகின்றது. இதை விளக்க வேறொரு வார்த்தையான 'குறிக்கப்பட்டவர்களுக்கான' (Particular) என்ற பதமும் பயன்படுத்தப்படுகின்றது.

சீர்திருத்தக் கோட்பாட்டின் இப்போதனையை விளங்கிக்கொள்ள வேண்டுமானால் முதலில் கிறிஸ்துவின் பிராயச்சித்தம் அல்லது பரிகாரப்பலியின் வரையறுக்கப்பட்ட தன்மை அதன் மதிப்பிலல்லாது அதன் வடிவத்திலேயே உள்ளது என்பதை உணர வேண்டும். அதாவது கிறிஸ்துவின் திரு இரத்தம் வரையறுக்கப்படமுடியாத மதிப்புள்ளது. அத்தோடு அவரது மரணத்தின் பயன்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், தெரிந்து கொள்ளப்படாதவர்கள் என்ற வேறுபாடில்லாமல் நற் செய்தியின் வாயிலாக அதைக் கேட்கும் எல்லோருக்குமே இலவசமாக வழங்கப்படுகின்றது. எல்லா மனிதர்களுமே இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வதாயிருந்தாலும் கிறிஸ்துவின் பரிகாரப்பலியின் மதிப்பு ஒருபோதும் எந்தளவும் குறைவடையாது. இருந்தாலும் பிதாவானவர் கிறிஸ்துவின் பிராயச்சித்தத்தின் வடிவத்தின் மீது ஒரு வரையறையை எற்படுத்தியுள்ளார். அது என்னவெனில், பிதாவானவர் எவரை இரட்சிக்க வேண்டுமென்று சித்தங் கொண்டாரோ அவர்களையே கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் இரட்சித்தார் என்பதாகும்; அவர்களுக்குப் பதிலாகவே கிறிஸ்துவும் தம்மைப் பலியாகக் கொடுக்கச் சித்தங் கொண்டார். தனது மரணத்தின் பயன்கள் பிதாவினால் தம்மிடம் கொடுக்கப்பட்டவர்களுக்காக மட்டுமே வரையறுக்கப்பட வேண்டுமென்று கிறிஸ்து சித்தங் கொண்டார் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை (யோவான் 17:2,6,9,10; 10:15; 6:38,39)

திருமறையின் இப்போதனைக்கு எதிரான கருத்துக்கள் உலவுகின்றன இவற்றில் ஒன்று, 'தனிமுதல் மன்னுய்திக் கோட்பாடாகும்' (Absolute Universalism). இக்கருத்து கடவுள் எல்லா மனிதர்களையுமே இரட்சிக்கச் சித்தங் கொண்டிருப்பதால், கிறிஸ்துவால் எல்லோருமே இறுதியில் இரட்சிக்கப்படுவார்கள் என்று போதிக்கிறது. ஆனால் திருமறையோ சிலர் ஒருபோதுமே இரட்சிப்பை அடையமாட்டார்கள் என்று தெளிவாகப் போதிக்கின்றது (மத்தேயு

(மத்தேயு 25:31-46). இது திருமறைக்கு எதிரான கருத்து என்பதால் கிறிஸ்தவர்கள் எப்போதுமே இக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இன்று World Council of Churches[1] உடன் தொடர்புடைய சபைகளும், நிறுவனங்களும், 'புதுக்கருத்துக் கோட்பாட்டுமுறை'யைப் (Modernism[2]) பின்பற்றுபவர்களுமே இக்கருத்தைக் கொண்டுள்ளார்கள்.

இதைவிட இன்னுமொரு கருத்தும் பரவலாகக் காணப்படுகின்றது. கிறிஸ்தவர்களிடையெ இதை இன்று பெருமளவில் அவதானிக்கலாம். இதனைக் 'கட்டுப்பாடுடைய மன்னுயித்கோட்பாடு' (Conditional Universalism) என்று அழைப்பர். இக்கருத்துப்படி கடவுள் குறிப்பிட்ட மனிதர்கள் மட்டுமே இரட்சிக்கப்பட வேண்டுமென்று ஒருபோதுமே சித்தங்கொள்ளவில்லை. அதுமட்டுமன்றி கடவுள் மனிதன் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும் செயலின் ஒருபாகத்திற்கு மட்டுமே காரணகர்த்தாவாக இருந்து அதன் மறுபாகத்தை நிறைவு செய்யும் பொறுப்பை மனிதனிடமே விட்டுவிட்டார் என்றும் போதிக்கின்றது. இன்னொருவிதத்தில் கூறப்போனால் கிறிஸ்துவாலன்றி ஒருவருமே இரட்சிப்பை அடைய முடியாது; அதேவேளை மனிதனின் துணையின்றி அல்லது அவனது பங்கில்லாமல் கிறிஸ்து ஒருவரையும் இரட்சிக்கவும் முடியாது. மனிதன் மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்க அவனுக்குதவுவதாக இக் கருத்து போதிக்கும் 'சுயாதீனமான அவனது சித்தமே' இப் 'பங்காகக்' கருதப்படுகிறது. சுருக்கமாகக் கூறப்போனால் தன்னை இரட்சித்துக் கொள்ளக்கூடிய சுயமான வல்லமையை மனிதன் கொண்டிருக்கிறான் என்பது இப்போதனையின் சாராம்சம்.

> **"இத் திருமறைக் கல்வியை வேதபாட வகுப்புகளிலோ, ஞாயிறு பாடசாலைகளிலோ முறையாகப் போதிப்பது சபைமக்கள் ஆவிக்குரிய வாழ்வுக்கான வேத அறிவு பெற்று வளரத் துணைபுரிவதாக அமையும்."**

இப்போதனை மிகவும் ஆபத்தானதாகும். ஏனெனில் இது இரட்சிப்பை தங்களுடைய சுய முயற்சியால் 'எல்லோருமே' அடைந்து விடலாம் என்று போதிக்கின்றது. இப்போதனையைப் பின்பற்றும் சிலர் இரட்சிப்பை எல்லோரும் அடைய முடியாதென்றும் கூறுகிறார்கள். இரட்சிப்பை 'எல்லோரும்' தங்களுடைய சுய முயற்சியால் அடைந்து விடலாம் என்று போதிக்கும் ஆர்வத்தில் இயேசு கிறிஸ்து 'மட்டுமே' இரட்சிப்பிற்கு காரண கர்த்தாவாக இருக்கிறார் என்ற திருமறையின் போதனையை இது நிராகரிக்கின்றது.

இப்போதனையைப் பின்பற்றுபவர்களே இன்று நற்செய்தியை இலவசமாக வழங்கும் ஆர்வத்தில் அதனை 'மலிவான'தாக மாற்றியுள்ளனர். கூட்டத்தில் கை தூக்கினால் போதும் கர்த்தரை இலகுவாக அடைந்துவிடலாம் என்று பலர் விசுவாசிப்பதற்கும் இப்போதனையே காரணம். இதை விசுவாசிப்பவர்கள் பாவிகள் இரட்சிப்பை அடைய கர்த்தரின் வல்லமையை நம்பியிருக்காமல் தனி மனிதர்கள் எடுக்கும் தீர்மானங்களை நம்புகிறார்கள். 'கர்த்தருக்காகத் தீர்மானம் எடு' என்று பல பிரசங்கிகள் கூட்டங்களில் கதறுவதற்கும் இப்போதனையே காரணம். இலவசமாக நற்செய்தியை வழங்கும் படியாகத்தான் வேதம் போதிக்கின்றதே தவிர இரட்சிப்பை மனிதன் தன்முயற்சியால் அடைந்துவிடலாம் என்று போதிப்பதில்லை.

இப்போதனைக்கு மாறான திருமறையின் தெளிவான போதனையை குறிக்கப்பட்டவர்களுக்கான அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கான மீட்பு என்று அழைப்பர். இது இயேசு கிறிஸ்து குறிப்பிட்ட மக்களுக்காகவே தன்னைப் பரிகாரப்பலியாக ஒப்புக் கொடுத்தார் என்று விளக்குகின்றது. இதை சரியாக நாம் விளங்கிக் கொள்ளக் கிறிஸ்துவின் மரணத்தின் வடிவத்தை, அதன் தகுதியைப் பற்றி முதலில் புரிந்து கொள்ளல் அவசியம். கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அவர் குறிக்கப்பட்டவர்கள் அல்லது தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்காகவே மரித்தார் என்பது திருமறையின் போதனை. ஆனால் இவ்வாறாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லா நாடுகளையும், எல்லா இனத்தையும் சேர்ந்தவர்கள். உலகெங்கும் இவர்கள் பரந்து காணப்படுகின்றார்கள்.

இதனையே யோவானும், 'நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்' என்று குறிப்பிடுகிறார். யோவான், கிறிஸ்து எந்தவித விதிவிலக்குமின்றி எல்லா மனிதர்களுக்காகவும் மரித்தார் என்று போதிக்கவில்லை. ஆனால் கிறிஸ்து சர்வலோகத்திலுள்ள அநேக மனிதர்களுக் காகவும் மரித்தார் என்றே போதிக்கிறார். இது திருமறையின் ஏனைய பகுதிகளின் போதனைகளுடன் ஒத்துப் போவதாகவுள்ளது. ஜோன் ஓவன் 'மரணத்தினால் உண்டாகும் வாழ்வு' என்ற தனது நூலில் (புத்தக விமர்சனம், இதழ் 2, 95) இதனை விரிவாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளார்.

திருமறை பொதுவான மன்னுயித் கோட்பாட்டைப் போதிப்பதில்லை. ஒவ்வொரு மனிதனுக்குமாகவே கிறிஸ்து மரித்தார் என்ற போதனைக்கும் வேதத்திற்கும் தொடர்பில்லை. ஆனால் திருமறையின் குறிக்கப்பட்டவர்களுக்கான மன்னுயித் கோட்பாட்டின்படி நாம் சர்வலோகத்திலுள்ள எல்லா மனித இனங்களுக்கும் முழுமையான இரட்சிப்பைத் தரக்கூடிய நற்செய்தியை அறிவிக்க முடியும். நாம் இந்நற்செய்தியை அனைவருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டியது நமது கடமையாயிருக்கிறது. தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனையும் மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்கும்படியாக அழைக்க வேண்டியது நமது கடமை. ஏனெனில் ஜீவபுத்தகத்தில் பெயர் குறிக்கப்பட்டுள்ளவர்கள் யார் என்பதை அறிந்தவர் ஒருவருமேயில்லை. ஸ்பர்ஜன் கூறுவதுபோல, 'கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு பாவியாகிய மனிதன் அவர் தனக்காகவே மரித்தார் என்ற நம்பிக்கையைக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் அவர்களுக்கு இரட்சிப்போடு தொடர்புடைய விசுவாசம் இன்னும் கொடுக்கப்படவில்லை. ஆனால் ஒவ்வொரு மனிதனும் அவரை விசுவாசிப்பது அவசியம், ஏனெனில் அதன் மூலம் மட்டுமே கிறிஸ்து ஒருவரை இரட்சிப்பதாக வேதம் கூறுகிறது.' கிறிஸ்துவின் இரட்சிப்பை அதற்காகக் குறிப்பிடப்படாதவர்களுக்கு எவ்வாறு வழங்க முடியும்? என்ற வினாவுக்கு விடையளிக்கும் ஸ்பர்ஜன், 'ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்து எல்லோருக்குமாக நற்செய்தியின் மூலம் தம்மை வழங்குகிறார் என்று அறிந்திருந்தால் போதும்; நற்செய்தி எல்லோருக்கும் சொந்தமானது, அவரிடம் விசுவாசத்தோடு வருபவர்கள் இரட்சிப்பை அடைவார்கள்; அவரை நிராகரிப்பவர்கள் எந்தவிதமான சாக்குப் போக்கும் சொல்ல முடியாது' என்று கூறுகிறார்.

திருமறை போதிக்கும் இந்த வரையறுக்கப்பட்ட பிராயச்சித்தக் கோட்பாட்டை விசுவாசிக்கும்போதே நமக்கு இரட்சிப்பின் ஆனந்தமும் நிச்சயமும் கிடைக்கின்றது. 'என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார் தேவகுமாரன்' என்று பவுலால் கூற முடிந்ததற்குக் காரணமே கிறிஸ்து அவரைத் தெரிந்து கொண்டு அவருக்காகத் தம்மை ஒப்புக் கொடுத்திருந்ததால்தான். கிறிஸ்து எல்லோருக்குமாகவே மரித்து அதன் பலனை அனுபவிக்காமல் ஒருவன் வீண் போவானெனில் அவரது மரணம் தகுதியற்றது; ஒருவனைக் கரை சேர்க்க வல்லமையற்றது என்ற முடிவுக்கு வருவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் கிறிஸ்து குறிக்கப்பட்டவர்களுக்காகவே மரித்து, அன்போடு இரட்சிப்புக்குரிய நற்செய்தியை முழு உலகெங்கும் எல்லா நாடுகளும், எல்லா இனமும், ஒவ்வொரு மனிதனும் கேட்கும்படியாகப் பிரசங்கித்து மனந்திரும்பி தன்னை விசுவாசிப்பவர்களுக்கு இரட்சிப்பை அளிக்கிறார். இத்தெளிவான திருமறையின் போதனையைப் பின்பற்றி போலித்தனமான போதனைகளில் இருந்து எம்மைக் காத்துக் கொள்வோம்

1. இதைச் சேர்ந்த சபைகள் சத்தியத்தின் அடிப்படையிலல்லாது வெறும் நிறுவன அடிப்படையில் ஒன்று சேர்ந்து இயங்குகின்றன. பிற மதங்களின் மூலமாகவும் சத்தியம் வெளிப்படுத்தப்படுவதாக இவர்கள் நம்புகிறார்கள்.

2. இதுவும் 'லிபரலிசமும்' ஒன்றே. வேதம் பல தவறுகளைக் கொண்டுள்ளதாகவும், கலாச்சாரத்தின் அடிப்படையில் எழுதப்பட்டிருப்பதால் அது காலத்திற்குத் தகுந்தபடி பயன்படுத்தப்பட வேண்டியதொன்றாகவும் இது கருதுகின்றது. வேதத்தைவிட மனிதசிந்தனைக்கும், ஞானத்திற்கும் இது அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

*அடுத்த இதழில்:*

**'திருமறை போதிக்கும் தூய வாழ்க்கை'**

# கேள்வி? - பதில்!



*வாசகர்கள் எமக்கு அனுப்பும் கேள்விகளில் தெரிவு செய்யப்பட்டவை ஏனையோரின் பயன்கருதி இப்பகுதியில் பிரசுரமாகும். - ஆசிரியர்*

# திருமறையும் தமிழ்க் கலாச்சாரமும்!

*❀ ஒருவர் கிறிஸ்தவராக மாறியபின் எந்தளவுக்கு தமது கலாச்சாரத்தைத் தொடர்ந்து பின்பற்ற முடியும்?*

❀ முதலில் கலாச்சாரம் என்றால் என்ன என்று சிந்திக்க வேண்டும். கலாச்சாரம் என்பது ஒரு இனத்தின் வாழ்க்கைமுறை அல்லது பண்பாடு. கலாச்சாரம் இல்லாத இனமே இல்லை. சமுதாயத்தோடு ஊறிப்போயிருப்பது கலாச்சாரம். ஒருவிதத்தில் ஒவ்வோரு இனத்திற்கும் ஒளியூட்டுவது அதன் கலாச்சாரம் என்று கூறலாம். ஆகவே எந்த இனத்திலிருந்தும் அதன் கலாச்சாரத்தைப் பிரிக்க முடியாது. ஒரினத்தின் கலாச்சாரத்தை அழிப்பதன் மூலம் அந்த இனத்தையே அழித்து விடலாம். எனவே கலாச்சாரம் என்பது தீமையானதல்ல.

**கர்த்தரின் வார்த்தைக்கு முரணான எதையும், அது நாம் வழிவழி வந்த பண்பாடாக இருந்தாலும் கிறிஸ்தவர்கள் பின்பற்றக் கூடாது.**

திருமறையின்படி எல்லா இனங்களும் பாவத்தின் குழந்தைகளாக இருப்பதால் அவ்வினங்களின் கலாச்சாரமும் பாவத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. பாவத்தினால் பாதிக்கப்படாத பண்பாடே இல்லையெனலாம். ஆகவே எந்த இனக்கலாச்சாரமாக இருந்தாலும் அதில் நல்லதும், கெட்டதும் சேர்ந்தே காணப்படும். கர்த்தரின் வார்த்தையே நம் பண்பாட்டில் எது அவரது நியாயப் பிரமாணத்திற்கு முரணானது என்று விளக்கிக் காட்டுவதாக இருக்கிறது. கர்த்தரின் வார்த்தைக்கு முரணான எதையும், அது நாம் வழிவழி வந்த பண்பாடாக இருந்தாலும் கிறிஸ்தவர்கள் பின்பற்றக் கூடாது. வேத வாழ்க்கை நடத்தும்போது வேதத்திற்கு முரணானவற்றை நாம் பின்பற்றக் கூடாது. அத்தோடு தமிழ்க் கலாச்சாரத்தோடு இந்துமத சடங்குகளும், சம்பிரதாயங்களும் ஒன்றிணைந்து காணப்படுவதால் புறமதத் தொடர்புடைய பழக்க வழக்கங்களை நாம் பண்பாடென்ற பெயரில் பின்பற்ற முடியாது. இதற்கு உதாரணமாக பெண்கள் நெற்றியில் பொட்டு வைப்பது, சில வகைப் பண்டிகைகளைக் கொண்டாடுவது, ஆகியவற்றைக் குறிப்பிடலாம். திருமறையைக் கொண்டு நம் கலாச்சாரத்தில் எவை பின்பற்றத்தகாதவை என்பதை நாம் ஆராய்தல் அவசியம். இது எல்லா இனங்களுக்குமே பொருந்தும்.

சமய சார்பற்ற சில வழக்கங்கள் இனங்களிடம் காணப்படலாம். உதாரணமாக நான் வாழும் நாட்டிலுள்ள 'மவொரி' (Maori) என்ற இனத்தவர் ஒருவரை வரவேற்கும்போது அவர்கள் மூக்கைத் தமது மூக்கால் தொட்டு வரவேற்பது வழக்கம். இதே விதமாக வேறு இனத்தவர் ஒருவரைக் கட்டி அணைத்து வரவேற்பதை வழக்கமாகக் கொண்டிருக்கலாம். மேலைநாட்டினர் கைகளைக் குலுக்கி வரவேற்பர். நாம் கைகூப்பி வரவேற்பதைப் பண்பாடாகக் கொண்டிருக்கிறோம். இவற்றிற்கும் சமயத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லாததால் இவற்றை நாம் தொடர்ந்து பின்பற்றலாம். இவ்வாறு திருமறையைப் பயன்படுத்தி நாம் நமது காலாச்சாரத்தை ஆராய்வது அவசியம்.

கலாச்சாரம் என்பது வெறும் சடங்குகளையோ, சம்பிரதாயங்களையோ மட்டும் குறிப்பதாகாது. ஒழுக்கம் சம்பந்தமான காரியங்களிலும் சமுதாயத்தில் கலாச்சாரம் என்ற பெயரில் தவறான பழக்க வழக்கங்கள் காணப்படலாம். உதாரணமாக உண்மையை உண்மையென்றும், பொய்யைப் பொய்யென்றும் கூறாமல் மற்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவும், நம்மைப் பற்றி அவர்கள் தவறாக நினைத்து விடக்கூடாது என்பதற்காகவும் உண்மையைப் பொய்யாக்குவதும், பொய்யை உண்மையாக்குவதும் வழக்கம். இது பார்வைக்குத் தீமையற்றதாகப்பட்டாலும் திருமறையைப் பொறுத்தவரையில் போலித்தனமானதும் வெறுக்கத்தக்கதுமான செய்கையாகும். அல்லது இதே விதமாக திருமறைக்குப் புறம்பான ஒழுக்கக் குறைவான எதையும் அதுவே நடைமுறைப் பண்பாடாக மாறியிருந்தாலும் கூட நாம் பின்பற்றக்கூடாது.

> வாசகர்கள் எங்கள் கேள்விகளுக்கு பத்திரிகை பதிலளிக்குமா? என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே உங்கள் கேள்விகளுக்கு நேரடியாகவோ அல்லது அவற்றில் தெரிவு செய்யப்பட்டவற்றிற்கு ஏனையோர் பயன்கருதி இப்பகுதி மூலமோ இனி பதிலளிக்கப்படும். கேள்விகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
>
> **The Bible Lamp**
> **P O Box 62-159**
> **Sylvia Park**
> **Auckland**
> **New Zealand**

# கிறிஸ்தவ ஒழுக்கம் . . .

❀ *கிறிஸ்தவ ஒழுக்கத்தைப்பற்றி விளக்கிக் கூறுவீர்களா?*

❋ கிறிஸ்தவ ஒழுக்கம் என்று நாம் கூறுவது, கிறிஸ்துவுக்குள் நாம் வாழவேண்டிய புது வாழ்க்கையின் நடைமுறைப் பண்புகளைக் குறிக்கும். இதற்காக நமது பழைய வாழ்க்கையில் நாம் ஒழுக்கமே இல்லாதவர்களாக இருந்தோம் என்று அர்த்தமல்ல. எனெனில் ஒழுக்கத்தைப் பற்றிய எண்ணங்கள் நமக்கு ஏற்பட்டதற்குக் காரணமே கடவுளுடைய நியாயப்பிரமாணம் நம்மிருதயத்தில் எழுதப்பட்டிருந்ததுதான். ஆனால் உண்மையில் கூறப்போனால் திருமறையைப் பொறுத்தவரையில் கடவுளை அறியாமல் இருப்பதே ஒழுக்கக் குறைவு. கிறிஸ்தவ ஒழுக்கத்திற்கு அடிப்படையே கடவுளை அறிந்து கொள்ளும் அறிவுதான். ஒருவர் கிறிஸ்தவனாக மாறியபின் அவர் முதன் முதலாகக் கர்த்தர் தாம் எவ்வாறு வாழ வேண்டுமென்று தன் வார்த்தையில் கூறியிருக்கிறார் என்பதை அறிந்து கொள்கிறார். திருமறையே கிறிஸ்தவ ஒழுக்கத்தை விளக்கிக் கூறுகிறது.

யாத்திராகமம் **20** ஆம் அதிகாரத்தில் காணப்படும் பத்துக் கட்டளைகளும் எல்லாவற்றையும் உள்ளடக்கிய சுருக்கமான ஒழுக்கப் போதனைகளாக உள்ளன. புதிய ஏற்பாடு உட்பட முழுவேதமும் இவற்றின் அடிப்படையிலேயே அமைந்து இவற்றையே மேலும் விளக்கிக் கூறுகின்றது. இதனாலேயே இப்பத்துக் கட்டளைகளும் 'ஒழுக்க நீதிச்சட்டங்கள்' என்று அழைக்கப்படுகின்றது. இவ்வொழுக்க நீதிச் சட்டங்கள் கடவுளால் முழு மனித இனத்துக்கும் வழங்கப்பட்டது. இவற்றில் முதல் நான்கும் கடவுள் யார்? அவரை நாம் எவ்வாறு, எந்நாளில் ஆராதிக்க வேண்டும் என்று போதிக்கின்றன. இறுதி ஆறும் நாம் கடவுளை அறிந்து கொண்ட அறிவோடு சக மனிதர்கள் மத்தியில் எத்தகைய வாழ்க்கையை வாழ வேண்டும் என்று போதிக்கின்றன. (குறிப்பாக சலுகைகளைப் பயன்படுத்தி முன்னுக்கு வருவது பற்றி வாசகர் கேட்ட வழக்கத்தை இக்கட்டளைகளின் **8** ஆம் **9** ஆம் கட்டளைகள் எதிர்க்கின்றன) ஆகவே இப்பத்துக் கட்டளைகளுக்குள் அடங்க முடியாத ஒழுக்கங்களே இல்லையெனலாம். அதுமட்டுமன்றி இவற்றின் அடிப்படையிலேயே புதிய ஏற்பாடும் ஒழுக்கம் பற்றிய அநேக போதனைகளைத் தருகின்றது. இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இக் கட்டளைகளின்படியும், புதிய ஏற்பாட்டின் போதனைகளின்படியும் வாழும் வல்லமையைத் தனது ஆவியின் மூலமாகக் கர்த்தர் அளிக்கிறார். அது மட்டுமல்லாது இவற்றை நாம் தவறாது கருத்தோடு பின்பற்றவேண்டுமென அவர் எதிர்பார்ப்பதோடு, இவற்றை மீறுபவர்கள் பாவம் செய்தவர்களாவார்கள் என்றும் விளக்கியுள்ளார் (மத்தேயு ***5:17-20;*** யோவான் ***2:3,4; 1*** யோவான் ***3:4***)..

சிலர் இவை கடுமையானவையாக இருக்கின்றதென்றும் இவ்வாறெல்லாம் யாரால் வாழ முடியும் என்றும் வாதம் செய்யலாம். ஆனால் நாம் ஏற்கனவே கூறியபடி கடவுளுடைய அன்பை அறியாதவர்கள் இத்தகைய வாழ்க்கையை வாழ முடியாது. எங்கு உண்மையான தேவ அன்பிருக்கிறதோ அங்குதான் கடவுளின் கட்டளைகளுக்கு உட்படும் ஆர்வமும், அவரைப் பிரியப்படுத்தும் வேகமும் இருக்கும். கிறிஸ்தவர்கள் இக்கட்டளைகளை அடிமைத்தனத்தோடல்லாமல் அன்போடு நிறைவேற்றுகிறார்கள். எனெனில் கிறிஸ்தவ வாழ்க்கையில் அன்பு முக்கிய இடத்தை வகிக்கிறது. தேவ அன்பில்லாமல் அவரது கட்டளைகளை நாம் ஒருபோதும் நிறைவேற்ற முடியாது. அத்தோடு அவரது கட்டளைகளை நிறைவேற்ற மறுக்கிறவர்களும் தேவ அன்பையே அறியாதவர்கள் ஆவர் (யோவான் ***15:10;*** யோவான் ***5:2,3***)..

சிலர் இப்பத்துக் கட்டளைகள் பழைய ஏற்பாட்டு மக்களுக்குக் கொடுக்கப்பட்டவை; புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் இவற்றைப் பின்பற்றத் தேவையில்லை, எனெனில் கிறிஸ்து இவற்றைத் தம்மில் நிறைவேற்றி இவற்றில் இருந்து நமக்கு விடுதலை தேடித் தந்துள்ளார் என்று போதிக்கின்றனர். இவர்களை `Antinomians', நியாயப்பிரமானத்திற்கு எதிரானவர்கள் என்று அழைப்பர். திருமறையைத் தவறாகப் புரிந்து கொண்டதனால் பழைய, புதிய ஏற்பாடுகளுக்கிடையில் உள்ள தொடர்பை அறியாது இவர்கள் இத்தகைய முடிவுக்கு வந்துள்ளனர். கிறிஸ்து நியாயப்பிரமாணம் முழுவதையும் கடைப்பிடித்து தமது வருகையையும், சிலுவை மரணத்தையும், கிருபாதாரப்பலியையும் படம் பிடித்துக் காட்டும் பழைய ஏற்பாட்டு சடங்குகள், சம்பிரதாயங்களில் இருந்துதான் நமக்கு விடுதலை தேடித்தந்துள்ளார் (எபிரேயர்). ஆனால், பத்துக் கட்டளைகள் என்றுமே நிரந்தரமானவை. முழு மனித இனமும் அவற்றைப் பின்பற்ற வேண்டியது அவசியம். கிறிஸ்தவர்களுக்கு இவ்வுலகில் அது நிரந்தரமான வாழ்க்கை நியதி. ஒழுக்க வழிகாட்டி.


# யெகோவாவின் சாட்சிகள் !

❀ *'யெகோவாவின் சாட்சிகள்' குறித்து விளக்குவீர்களா?*

❋ சுருக்கமாகக் கூறப்போனால் யெகோவாவின் சாட்சிகள் வழமையான கிறிஸ்தவ சமயக்குழுக்களில் ஒன்றல்ல. **1931** ஆம் ஆண்டில் இப்பெயரை ஏற்படுத்திக் கொண்ட இவ்வியக்கம் இதற்கு முன் வேறு நான்கு பெயர்களைக் கொண்டிருந்தது. இதற்கும் கிறிஸ்தவத்திற்கும் எந்தவிதத் தொடர்புமில்லை. இவர்கள் கடவுளின் பழைய ஏற்பாட்டுப் பெயர்களில் ஒன்றான யெகோவாவின் பெயரைப் பயன்படுத்தி திருமறைக்கு முற்றிலும் புறம்பான போதனைகளை எற்படுத்தியுள்ளனர். இதனை நாம் ஒரு சமயமாகக் கூட கருதுவதில்லை. இது தனியொரு மனிதனால் கிறிஸ்தவத்தின் பெயரில் ஏற்படுத்தப்பட்ட சமயத்தின் பெயரில் உலவி வரும் போலிக் கோட்பாடு. இப்போதனை இயேசு கிறிஸ்துவைக் கடவுளாக ஏற்றுக் கொள்வதில்லை. கிறிஸ்து யெகோவாவிலும் கீழானவர் என்று போதித்து கிறிஸ்தவ திரித்துவப் போதனையை இவ்வியக்கம் நிராகரிக்கிறது. யோவான் ***1:1*** ஐ இவர்கள் மாற்றிப் பயன்படுத்தி கிறிஸ்துவாகிய வார்த்தையின் தெய்வீகத்தை மறுதலிக்கிறார்கள். கிறிஸ்துவின் பிராயச்சித்தப் பலியை முழுமையானதாகக் கருதாமல், அதன் அடிப்படையில் மனிதன் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ள முடியும் என்றும் இவ்வியக்கம் போதிக்கின்றது. கிறிஸ்து தனது சரீரத்தோடு உயிர்த்தெழாமல் ஆவியாகவே உயிர்த்தெழுந்தாரென்றும், அவரது சரீரத்திற்கு என்ன நடந்ததென்று தெரியாதென்றும் இது கருதுகின்றது. மேலும் பல வேதத்திற்குப் புறம்பான போதனைகளைக் கொண்ட மொத்தத்தில், கிறிஸ்தவத்தையே இழிவுபடுத்தும் ஓர் இயக்கம்.

# ஆசிரியரெழுதிய சில நூல்கள்

### 1. திருமறை (20 பக்கங்கள்)




திருமறையின் அதிகாரத்திற்கு பலரும் உட்பட மறுக்கும் இக்காலத்தில், நாம் விசுவாசிக்க வேண்டிய அதன் அதிகாரத்தையும், போதுமான தன்மையையும் இந்நூல் விளக்குகிறது.

### 2. ஆன்மீகக் குழப்பம் (20 பக்கங்கள்)




இன்று சுற்றிவரக் கிறிஸ்தவர்கள் மத்தியில் பார்ப்பது எழுப்புதலா? இல்லை ஆன்மீகக் குழப்பமா? என்பதை வேத பூர்வமாக ஆராய்கின்றது இந்நூல்.

### 3. திருமறையா? திராவிட சமயமா? (28 பக்கங்கள்)



கிறிஸ்தவத்திலிருந்துதான் ஆதித்திராவிட சமயங்கள் தோன்றின என்ற தவறான போதனையைப் பரப்பி வருபவர்களின் வாதங்களைத் திருமறையின் அடிப்படையில் ஆராய்கிறது இந்நூல்.

தமிழ்நாட்டில்:
**Bible Lamp,
'Atman Illam',
73. Yercaud Main Rd,
Salem 636008
(Rs. 5.00 each including postage)**

ஸ்ரீ லங்காவில்:
**T. B. Surendren
19. Rajasinghe Rd,
Colombo 6
(Rs. 10.00 each including postage)**

ஏனைய நாடுகளில் உள்ளோர் ஆசிரியருக்கே எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்

# எண்ணங்கள்

திருமறைத்தீபத்தைத் தொடர்ந்து படித்து வருகிறேன். எனது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பத்திரிகை மிகவும் ஆசீர்வாதமாக இருக்கின்றது. வேதத்தின் மாபெரும் இரகசியங்களை இதன்மூலம் எனக்கு வெளிப்படுத்திவரும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். தொடர்ந்து பத்திரிகை கிடைக்க வழி செய்யுங்கள்.

*ஜோர்ஜ், சென்னை, தமிழ்நாடு*

திருமறைத்தீபம் எனக்கும் சபையாருக்கும் பயனுள்ளதாக இருக்கின்றது. இவ்வூழியத்திற்காகத் தொடர்ந்து ஜெபிக்கிறேன். பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்பி வையுங்கள்.

*பாஸ்டர். வி. மோகன், கொழும்பு, ஸ்ரீ லங்கா*

திருமறைத்தீபத்தில் வருகின்ற அனைத்துக் கட்டுரைகளும் அருமை. கேள்வி - பதில் விளக்கங்கள் அற்புதம். பல ஆண்டுகளாக என் மனத்தில் இருந்த கேள்விகளுக்கு பத்திரிகையின் சகல அம்சங்களும் பதிலளிக்கின்றது. தொடர்ந்து அனுப்புங்கள். இவ்வூழியத்திற்காக ஜெபிக்கிறேன்.

*ஜே. பி. போல், ஓமான்.*

திருமறைத்தீபமும், புத்தகங்களும் அனுப்பி வைத்ததற்காக நன்றி. எமது சபையார் தீபத்தை விரும்பி வாசிக்கிறார்கள். பத்திரிகையின் கருத்துக்கள் அனைத்தும் எமக்கு ஏற்புடையதே. இவ்வூழியத்திற்காக கர்த்தருக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

*ஸ்டீவன் குரூஸ், நோர்வே*

நமது சபைகளுக்கு மத்தியில் ஆவிக்குரிய செய்திகள், புத்தக விமர்சனம், கேள்வி - பதில், கிறிஸ்தவக் கோட்பாடு ஆகிய பகுதிகளைக் கொண்ட நல்லதொரு பத்திரிகை வெளிவராதா என்று ஏங்கிக் கொண்டிருந்த என்னைப் போன்றோருக்கு திருமறைத்தீபம் மிகவும் பிரயோஜனமாயிருக்கிறது.

*வசந்தகுமார், சென்னை, தமிழ்நாடு*

திருமறைத்தீபம் எங்களுக்குப் பல சத்தியங்களை வெளிப்படுத்தி அநேகரைத் தைரியப்படுத்தியிருக்கிறது. சபையாருடைய நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். சபையார் பத்திரிகையினால் பெரும் பயனடைந்திருக்கிறார்கள். தொடர்ந்து அனுப்புங்கள்.

*சகோ. ஜோன் பெர்னான்டோ, கொழும்பு, ஸ்ரீ லங்கா*

திருமறைத்தீபம் கிடைக்கப் பெற்றது. வேத வார்த்தைகளின் அடிப்படையில் அமைந்த இந்த பத்திரிகையை வாசித்து மிகவும் களிப்புற்றேன். கலப்படம் நிறைந்த வஞ்சக ஊழியங்கள் நடைபெறும் இக்காலகட்டத்தில் வார்த்தையைப் போதிக்கும் உங்களுடன் தேவ கிருபை தொடர்ந்திருக்க ஜெபிக்கிறேன்.

*பாஸ்டர். அன்டன் ஜோசப், சுவிட்ஸர்லாந்து*

உங்களுடைய பத்திரிகை அருமை. உங்களைப்போல சத்தியத்தை விசுவாசிகளுக்கு எடுத்துரைப்பவர்கள் இன்று தேவை. தொடர்ந்து பத்திரிகையை அனுப்புங்கள்.

*சகோ. கு. தியாகராஜா, இங்கிலாந்து*

பத்திரிகை வந்து கிடைத்தது. தீபத்தில் வெளிவரும் அம்சங்கள் யாவும் சிறந்த முறையில் உள்ளன. ஒவ்வொரு விசுவாசியும் வாசிக்க வேண்டிய பத்திரிகை. சிரிப்பலைகள் குறித்து நீங்கள் எழுதியது தெளிவாக இருந்தது. இன்று சபைகளில் இது ஒரு வேடிக்கையாக இருக்கின்றது. தொடர்ந்து பத்திரிகையை அனுப்பி வையுங்கள்.

*பாஸ்டர். ஆரோக்கியசாமி, மலேசியா*

பத்திரிகை நண்பர் ஒருவர் மூலமாகக் கிடைத்தது. இதில் வரும் ஆக்கங்கள் எனக்குப் பிரயோஜனமாக இருந்தது. முந்திய இதழ்களையும் ஏனைய ஆக்கங்களையும் தயவுசெய்து அனுப்பி வையுங்கள். என் வளர்ச்சிக்கு இவை துணை புரியும்

*எம். டி. மாசிலாமணி, இங்கிலாந்து*